கன்னித்தமிழ் ★

1261

ஆசிரியர்: மறைமலையடிமை

1261
3-55

1—9—1955

மலர் 1
இதழ் 1

மாத வெளியீடு

விலை
4
அணா

கன்னித் தமிழ், மாதவெளியீடு

தனிப் பிரதி அணா 4   ஆண்டு சந்தா ரூ. 3.

மானேஜர்:

கன்னித் தமிழ், களஞ்சேரி. (தஞ்சை)

1261
3-55

இந்த இதழில்....

1. ஆண்டு நிறைவும் உறுதி மொழியும் ... 6
2. கவியரசி—"தமிழழகன்" ... 7
3. கம்பர் கவியின் செந்தமிழின்பம் ... 9
தொ. மு. பா. தொண்டைமான், M. A.,
4. என் சொல்வேன்! ... 21
உடுமலை மு. பெரியண்ணன்
5. கலங்கரை விளக்கம் ... 22
"சுமதி"
6. கனவொன்று கண்டேன்! ... 35
R. மல்லப்பிள்ளை
7. விண்ணப்பம் ... 37
"மதனன்"
8. இளம்புலவன் ... 40
சொ. வேலாயுதம்
9. கவிஞன் ... 45
ஆர். சகநாதன்
10. அவளின் பாடல்! ... 48
ம. லெனின்
11. ஆசைக் கனவு ... 49
ச. கலியமூர்த்தி
12. புலி ஆட்டம் ... 57
"ஆரம்"

ஆண்டு நிறைவும், உறுதி மொழியும்.

மன்மத ஆண்டில் உலகமெங்கும் நன்மைகள் பெருகுக. அறம் தழைக்க, செல்வம் ஓங்குக. கலைகள் வளர, அமைதி நிலவுக. எல்லாத் துறைகளிலும் அறிவொளி விளங்குக.

நம்மால் காலத்தைக் கட்டுப்படுத்த முடியாது. ஆனால், நமது மனதைக் கட்டுப்படுத்தலாம், நல்ல வழியிலே அதை நிலை நிறுத்த முடியும். நமது மனப்பான்மையை ஒட்டியே மழையும், பூமி வளமும் அமைகின்றன என்பது நமது ஆன்றோர்கள் நீண்ட அனுபவத்தால கண்ட பெரிய உண்மை.

''எவ்வழி ஆடவர் நல்லவர்
அவ்வழி நல்லை நீ வாழிய நிலனே''

(ஔவை)

ஆங்கில முறையில் ஏதேனும் ஒரு சங்கத்தைச் சேர்ந்தவர்கள் (Pledge) உறுதிமொழி எடுத்துக் கொண்டு "இதனைச்செய்வேன்; இதனைச் செய்ய மாட்டேன்," என்று பலரறிய உரக்கக்கூறும் வழக்கம் இருந்து வருகிறது.

இதேபோல, நாமும் இவ்வாண்டில் நடந்து கொள்ளவேண்டிய ஒப்பனையாக "அருள்" என்னும் கண்ணோட்டத்தைப் பெற முயற்சி செய்வோமாக.

களஞ்சேரி,
தஞ்சை

இல. திருவாசகன்,
செயலாளர், கன்னித் தமிழ்ச் சங்கம்.



கவியரசி!

கவி "தமிழழகன்"

காவியக் காட்டிலோர் பாட்டரசி;—அவள்
கற்பனை மாளிகை வீட்டரசி;—உயிர்
ஓவியம் தீட்டும் அழகரசி;—அவள்
உலகெலாம் போற்றும் கலையரசி! (1)

காலில் சதங்கை குதித்திடுமே;—அவள்
கைவளை யும்பண் உதிர்த்திடுமே;—தமிழ்
நாவில் அவள் ஒளி வீசிடுமே;—மேனி
நாறு யிரம்கவி பேசிடுமே! (2)

கடல்மீ தோடிப் படர்கையிலே—வானக்
கண்ணாடியில் முகம் தோன்றிடுமாம்;—அவள்
உடல்மீ தொளிரும் ஒளியதிலோ—கடல்
உருகி உருகிப் பெருகிடுமாம்! (3)

பூமி மிதித்து நடக்கையிலே—வானம்
பூரித் துடுவாய்ச் சிரித்திடுமே!—அந்தப்
பூமியை விட்டு வான் தாவையிலோ—இங்கே
பூக்களாய்ச் சோலை விரிந்திடுமே! (4)

நிலவின் அடியில் கொலுவிருப்பாள்;—உதய
நேரம் வரவும் எழுந்திருப்பாள்!—தொலை
மலைவெளிச் சப்பால் மாலையிலோ—அந்தி
மயங்கி செக்கர் வயங்கி நிற்பாள்! (5)

வண்ண மலர்க்காட்டில் வாழ்ந்திருப்பாள்;—அடி
வானைக் கடலொடும் தொட்டிருப்பாள்!—புதிய
எண்ண மலர்க்காடாம் என்நெஞ்சிலும்—அவள்
ஏதேதோ மர்மங்கள் பேசிநிற்பாள்! (6)

அல்லிக் குளத்தில் மலர்ந்திருப்பாள்;—அவள்
ஆயிரம் பாடல் புனைந்திருப்பாள்!—கரும்
கல்லிலும் எட்டிலும் கற்பனையாய்—அழியாக்
காவியமாய் அவள் மேவிநிற்பாள்! (7)

வண்ணாத்திப் பூச்சி இறகினிலே—ஆடும்
வனமயில் தோகை விசிறியிலே—இன்னும்
கண்ணா யிரம்காணும் காட்சியிலே—எல்லாம்
காத்திருப்பாள் அவள் பூத்திருந்தே! (8)

வீசும் இளம் தென்றல் தேர் அவட்கே;—சுகம்
வீதியும் அவள்வலம் வருவதற்கே!—சுகம்
பேசும் கிளிகள் இவள்துணையே;—தெய்வப்
பிறவியிலும் அவட்கே(து) இணையே? (9)

ஆடுவாள் மின்னலின் ஆட்டத்திலே;—அவள்
அசைந்தோடு வாள்நதி ஓட்டத்திலே;—இசை
பாடுவாள் அருவி மோகத்திலே;—அவள்
பாய்ந்தெழுவாள் புயல் வேகத்திலே! (10)

கவிதை எனுமோர் பெண்ணரசி;—அவள்
கவிஞருக் கெல்லாம் நல் விண்ணரசி!—அழகுத்
தவிசில் அமரும் புவியரசி;—அவள் செந்
தமிழாய் விரிந்த கவியரசி! (11)

கம்பர் கவியின் செந்தமிழின்பம்

தொ. மு. பா. தொண்டைமான், B. A.

உலகம் போற்றும் உயரிய நூலாகிய இராமகாதையை முதன் முதலில் உலகுக்குத் தந்தருளிய பெரியார் வான்மீகராவர். அக்காதை, பின்னர் கவியரசர் கம்பர் பெருமானால் தமிழ் மொழியில் அமைக்கப்பெறும் பேறுபெற்றது என்பதும் யாவரும் அறிவர்.

இந்த சரித்திரத்தின் உள்ளுறை பொருளை உற்றுநோக்கும் ஆராய்ச்சியாளருக்கு, இராமாயண காலத்திலிருந்த நாடு எத்தன்மை வாய்ந்தது என்று புலப்படும். இந்திய நாட்டு பூர்வீகக் குடிகள் திராவிடர் என்றும், வடநாடிருந்து தென்னாடு புகுந்தவர் ஆரியர் என்றும், இவர்களில் ஒருவர் மற்றொருவர் உரிமைகளைக் கைப்பற்ற முயல, மற்றவர் தமது உடைமைகளைக் கைப்பற்ற முயற்சி செய்ய, இரு பிரிவினருக்கும் இயற்கையாகப் போர் எழுந்தது என்றும், இப்பெருஞ்சமரின் ஒரு பகுதியே இராமசரிதமாகும் என்பதும் சில ஆராய்ச்சியாளர் துணிபு. இதுவே சரித்திர ஆசிரியர்கள் ஒப்பும் உண்மையுமாம்.

ஆனால் வான்மீகர், இக்கதையை மிகவும் விரித்து, பன்னலமும் பல பொருளும் பொருந்த அமைத்து காவிய உலகத்தை அணிசெய்வாராயினர். ஆனால், அவர் அச்சரித்திரத்தின் ஒரு பகுதியினரை தேவரெனப்போற்றியும், மற்றவரை அரக்கர், வானரர் என்று கூறிய தோடமையாது, நூல் முழுவதிலும் ஆரியருடைய பழக்கவழக்கங்களையே அமைத்து காவியத்தை முடிப்பாராயினர்.

இதே வரலாற்றை தமிழில் இயற்றிய கவியரசர் கம்பர் பெருமான் முதனூலைப் பின்பற்றி இந்நூலை எழுதுகின்றேன், என்று கூறினாலும் தமிழகத்து தனிப்பெரும் புலவரான இவர் காவிய முழுவதிலும், தமிழ் மொழியின் தனிப் பெருமையினையும், தமிழகத்து மக்களின் ஒழுக்கத்தின் விழுப்பத்தினையும், அவர் தம் பழக்கவழக்கங்களையும், தமிழ் மாதர் நிறையையும் போற்றிப் புகழ்கின்றார். இத்தகைய இடங்கள் கம்பர் காவியத்தில் பலவுள.

இந்த இடங்களில்தான், கவி கம்பரின் செந்தமிழின் பம் பொங்கி வழிகின்றது.

> "செந்தமிழென்னும் போதினிலே
> இன்பத் தேன் வந்து பாயுது காதினிலே"

என்று பாரதி அருளிய உண்மையை இவ்விடத்தில் காணலாம். இனி நூலாராய்ச்சியில் செல்வோம்.

கம்பர், தமிழ் மொழியினையும் அதன் பழமையையும் உணர்ந்து,

> "என்றுமுள தென்தமிழை இயம்பி இசைகொண்டான்"

என்றும்,

> "நீண்ட தமிழாலுலகை நேமியளந்தான்"

என்றும் தமிழின் தனிப்புலவரான குறுமுனியைப் போற்றுகின்றார். இவ்விடத்தில் கவிநலம் பெரிதும் விளங்குகிறது. தமிழ் மொழியின் தொன்மையினை உணர்ந்த கம்பர், "என்றுமுள தேன் தமிழ்" என்றும் "நீண்ட தமிழ்" என்று போற்றியதோடு, இத்தமிழக மக்கள் இம்மொழி அகத்தியர் நாவிலே பிறந்ததென்ற தவறான கொள்கை உடையவராக இருக்கிறார்கள் என்பதையும் உணர்ந்தவராய், அதை அகற்றவேண்டி அத்தென் தமிழை இயம்பி இசைகொண்டவரே அகத்தியர் என்று கூறுகின்றார்.

ஆகவே தமிழ் மொழி ஒருவரால் படைக்கப்பட்டதன்று என்றும், பொதிய முனியே தமிழின் இனிமையை

உணர்ந்து, அதைக்கற்று அம்மொழியின் இலக்கியம் கண்ட தற்கு இலக்கணம் இயம்பி, புகழ்பெற வாழ்ந்த பெருமகன் என்பதும் தெளிவாகின்றது.

இவ்விடத்தில் அகத்தியரை, "தமிழெனும் அளப்பருஞ் சாதி தந்தவன்" என்றும், தழற்புரைச் சுடர்க் கடவுள் தந்த தமிழ் தந்தான்" என்றும் போற்றுகின்ற கம்பரின் நோக்க மென்ன? என்று வினவலாம். இங்கு, தமிழ்மொழி ஆழ மறிய முடியாத ஓர் கருங்கடல் என்பதும், அக்கடலை உல கில் நிமிர்ந்தேறவிட்ட பெருமையே குடமுனிக்கு உரிய தென்பதும் வலியுறுத்தப்படுகின்றது.

தமிழின் தொன்மையைக் குறிக்கவே உபசார வழக் காக, "தழற்புரைச் சுடர்க் கடவுள் தந்த தமிழ்" என்றும் "அகத்தியன் பயந்த செஞ்சொல் ஆரணங்கு" என்றும் சொல் லப்பட்டது. அதனால், இம்மொழி அகத்தியரிடமிருந்தோ அல்லது அக்கடவுளிடத்திலிருந்தோ உதித்ததாகக் கொள் வது தவறாகும்.

தமிழின் இனிமையை உணர்ந்த கம்பர், "வண்டு தமிழ் பாட்டிசைக்கும் தாமரையே" என்று அதன் இனிமையைப் புகழ்கின்றார். "தமிழினும் இனிய தீஞ்சொற்றைபல்" என் னும் நைடதத்தார் வாக்கும் இங்கு நோக்கத்தக்கது. "தமி ழென்பது இனிமை நேர்மை" என்பர் சூடாமணியார். அழ குள்ள தமிழ் மொழியின் இனிமை அனுபவித்தோருக்கே புலப்படும்.

கம்பர் கவியின் செந்தமிழின்பத்தை நுகர்ந்த தமிழ் பெருமக்கள் பலரும் அவ்வினிமையை அறிந்தவரேயாவர்.

இனி கவியரசர், தமிழ்மொழியில் மட்டுந்தான பற்று டையவராக விளங்கினரென்றால், அன்று; இத்தமிழ் மொழி பேசப்பட்ட நாடு நகரங்களெல்லாம் அவரது கவிகளால் புனைந்து கூறப்படும் பேறு பெற்றன. "காவிரி நாடன்ன

கழனி நாடு" என்று கோசலை நாடு வருணிக்கப்படுகிறது. ஒரு நாட்டை உவமை செய்ய வேண்டியிருந்தால், இந்நாடு தெய்வ உலகத்தை ஒக்கும் என்று கூறுவதே கவிமரபாகும். ஆனால் இயற்கை நலம் வாய்க்கப்பெற்ற கம்பர், கண்ட பொருளில் கணிப்பவரன்றி காணப்பொருளில் கணிப்பசற்கறியார்" என்ற விதி பற்றி, தான் பிறந்து வளர்ந்த காவிரி நாட்டை ஒக்கும் அக்கோசலை நாடு என்று கூறுவது அவரது இடப்பற்றையும், கவி நயத்தையும் பெரிதும் விளக்குகின்றது.

இத்துடன் "தெய்வப் பொன்னியே பொருவுங் கங்கை" என்று கங்கையாற்றை போற்றுவது நம் கருத்தைக் கவரும் ஓர் இடமாகும். இன்னும் அவர் கன்னி நன்னாட்டைப்பற்றிக் குறிப்பிடும்பொழுது,

> "அத்திருத்தகு நாட்டினை அண்டர் நாடு
> ஒத்திருக்கும் என்றால் உரை யொவ்வுமோ
> எத்திறத்தினும் ஏழுலகம் புகழ்
> முத்தும், முத்தமிழும் தந்து முற்றுமோ"

என்று கூறும் செவ்வி கம்பர் கவி நலத்தால் அமைந்த ஒரு பொருளாகும்.

தமிழ்நாட்டின் சிறப்புடைப்பொருள்களான முத்திற்கும் முத்தமிழிற்கும் எத்தகைய ஏற்றம் கற்பிக்கின்றார் கவிஞர் என்பதை அன்பர்களே! உற்று நோக்குங்கள்.

இத்துடன்,

"அமுதுறல் தமிழ் ஒண் முத்தம் ஐய சந்தனம் மெல்வாசம் கமழ் குளிர் தென்றல் என்று கரையரும் பொருள் படாமல் இமிழ் கடல் வரப்பெலாம் தோன்றும் எண் பொருள் படு நாடேள்ளித் தமிழ் முதல் பிறக்கும் நாடாய்த் தயங்குமாற் பாண்டி நாடு" என்று சிவப்பிரகாசர் அருளிய சீகாளத்திப் புராணச் செய்யுளும் கவனிக்கத்தக்கது.

தமிழகத்தின் தனிப்பெரும் பொருள்களான, தமிழ் மொழி, முத்தம், சந்தனம். தென்றல் என்பவைகளில் முன்

லேயதிரண்டையும் புகழும் கம்பர் கவியின் உயர்வு கற்ருர் உளத்திற்கு பேருவகை தருவதாகும்.

இன்னும், இராமனைப் போற்றுமிடத்துங்கூட இவரது தமிழ் மொழிப்பற்றே முனைந்து நின்றது. ஆரியர் கோனும் இராமன் "தேன் சோற் கடந்தான், வடசோற் கலேக்கு எல்லே தேர்ந்தான்" என்று புகழப்படுகின்ருன்.

மேலும் அறத்தின் வழி நின்ற ஆரியர்கோன், அனு மன்போன்ற வீரர்களைத் தென் திசையை நோக்கி மைதிலி யைத் தேடவிடுத்த காலையில் அவர்களுக்கு அறிவூட்டுகின் ருன்:

"வானர வீரர்களே! மற்றெல்லா வீரர்களையும் விட தென் திசையை நோக்கிச் செல்கின்ற நீங்கள் மிக்க கவன முடையவர்களாயிருக்கவேண்டும். தென்தமிழ் நாட்டில் பொதிய மலேச்சாரலில் அகத்திய முனிவரும் அவர் மாணுக் கரும், தமிழ்ச்சங்கம் ஒன்று நிறுவியிருக்கின்ருர்கள். அச் சங்கத்தில் மிளிரும் பெரும் புலவர்களின் சொல் வன்மை "கேட்பார் பிணிக்கும் தகையவாய்க் கேளாரும் வேட்பமொழி" வதாயிருக்கும். நீங்கள் அந்த இடத்தை அணுகுவீர்களா ஞல் அவ்விடத்துள்ளாது சொல்வன்மையில் ஈடுபட்டு முயன்ற கருமத்தையும் மறந்து, என்னையுமறந்து, என்தேவி யையும் மறந்து நீங்கள் தன்னையுமே மறந்துவிடுவீர்கள்! கொண்ட கருமமும் பழுதுபடும்.

ஆதலால் நீங்கள் அப்பொதிகைச் சாரலில் தங்காது அம்மலேயை இடமாகச் சுற்றி எடுத்த என் பணி முடிக்கச் செல்லுங்கள்" என்று இராமன் எச்சரிக்கிருன்.

நண்பர்களே! இக்கருத்தைத்தான் கவியரசன் கம்பன்

"தென் தமிழ் நாட்டகன் பொதியிற்
றிருமுனிவன் தமிழ்ச்சங்கம் சேர்கிற்றீரேல்
என்றுமவனுறைவிடமாம் ஆதலால்
அம்மலேயை யிடத்திட்டேகி"

என்று அமைத்தருளுகின்ருன்.

என்னே! இவரது அறிவு நுட்பத்தின் திறம். இராம னது எச்சரிக்கையோ இது? அன்று; தமிழ்க் கவிஞராம் கம்பரது சொந்தச் செல்வமன்றோ இது! எவ்வளவு அழகாக எவ்விடத்து, எக்காலத்து தமிழ் மொழிக்கும் அம்மொழியை ஆராயும் பெரும் புலவர் பலருக்கும் தனது அன்புப் படை யலைச் செலுத்துகின்றார். இவ்விடத்தில் செந்தமிழின்பம் ஒழுகாவிட்டால், வேறெவ்விடத்து ஒழுகும் என்று நேயர் களை கேட்கின்றேன்.

இனி கம்பர் தமிழ் மக்களின் ஒழுக்கத்தைப்பற்றிக் கொண்டிருக்கும் கருத்தைச் சிறிது ஆராய்வோம். தமிழ் மொழியின் சிறப்புடை இலக்கணமாகக் கருதப்படும் களவிய லொழுக்கம், கம்பர்பெம்மானால் பொன்னேபோல் போற்றப் படுகின்றது. ஆதி கவியாகிய வான்மீகி சீதையின் மண வினையைச் சித்தரிக்க நேர்ந்த காலையில் அவர் பிறந்தநாட்டுப் பழக்கவழக்கங்களுக்கேற்ப சுயம்வரம் ஒன்று நாட்டி, அச் சுயம்வரத்தில் ஆற்றல் மிகுந்த சிவனது வில்லை வளைத்து, நாணேற்றுவோருக்கு வைதேகியைப் பணயமாக குறிக்கின் றார். இம்முறையில் ஒருவன் மனைவியை அடைதல் அசுர மணமாகும் என்பர் பெரியோர்.

இந்த முறையை,

"முகையவிழ் கோதையை முன்னெயிற் றரிவையைத்
தகை நலங்கருதும் தருக்கினர் உளரெனின்
இவையிவை செய்தார்க்கு எளியன் மற்றிவளெனத்
தொகை நிலை உரைத்த பின்னறப் பகைவலித்
தன்னவை யாற்றிய அளவையில்
தொன்னிலை அசுரம் துணிந்தவாறே"

என்ற செய்யுளால் அறிக.

இம்முறை வடக்கேயிருந்த மக்களின் முறையாகும். அதனால் தமிழ் மகனான கம்பர், இம்முறை வழி நடந்து தனது காவியத்தை முடிக்க கருதவில்லை.

பிணி, மூப்பு இவையின்றி எப்பொழுதும் ஒரு தன்மையராய் உருவுந்திருவும், குலமும் குணமும், பருவமும், பண்பும் ஒத்தவராய் தலைமகளும் தலைமகனும் பிறர் கொடுப்பவும் அடுப்பவும் இன்றி, ஊழ்வினைப் பயனுய்த் தாமே எதிர்ப்பட்டுக் காதலித்துக் கலக்கும் முறையே களவியல் எனப்படும். இம்முறையே தமிழ் மக்களின் முறையாகும்.

இதையறிந்திருந்த கம்பர், சீதையை, மிதிலை மாநகரில், அரசமாளிகையின் கன்னிமாடத்து மேடையில் நிறுத்துகின்ருர். தெருவூடே முனிவர் முன்செலத் தம்பி பின் வர இராமனை நடத்துகின்ருர். இருவரும் ஒருவரையொருவர் பார்க்கின்றனர். கண்ணோடு கண்ணிணை கவ்வுகின்றது. இருவரது உணர்வும் ஒன்றி, அவர் தம் உள்ளத்தில் ஆதரவுபடுகின்றனர்.

ஆகவே கண்ணுல் கண்டு காதலித்த தலைவனை தன் கணவனுனவன் என்று கருதுகின்ருள் மங்கை. பின்னர் அவளது தோழியாகிய நீலமாலை, "முனிவருடன் வந்த மன்னவன் மைந்தன் வில்லிறுத்தான்' அவனே உன்னை மணமாலை சூடுவன்;" என்று சீதையிடஞ் சொன்னபோதும், அவள் வில்லொடித்த காரணத்தால் மட்டும் அவனைத் தலைவனுய் ஏற்றுக்கொள்ளாது, தோழி நீலமாலை சொல்லுகின்ற குறிகளால், வில்லொடித்த வீரன், தன் நிறை கவர்ந்த கணவனேயாகல் வேண்டும்; ஒருக்கால் வேருெருவனுயிருப்பின் இறந்துபடுவனேயன்றி வில்லொடித்த காரணத்தால் மட்டும் இவனை மணஞ்செய்ய முடியாது என்று ஓர் தீர்மானத்திற்கு வருகின்ருள்.

இத்தீர்மானத்துடன், கம்பர் மணவறையில் மணமகன் மணமகளுடன் அமர்ந்திருந்த காலத்துங்கூட,

"தன் கைவளை திருத்துபு கடைக்கணி லுணர்ந்தாள்"

என்று மீண்டும் தன் கருத்தை வலியுறுத்துகின்ருர், ஆதலால் தமிழகத்து ஒழுக்கம் அவரது உள்ளத்தில் எவ்வளவு ஆழ்ந்து கிடக்கின்றது என்பதை வாசகர்கள் உணரலாம்.

இன்னும் தமிழ் மக்களின் ஒழுக்கத்தைப் பலகாலும் பலவிடத்தும் போற்றி மகிழும் கம்பர் கவி நலம் கற்றோர் உள்ளத்திற்கு பேரின்பத்தைத் தருகின்றது. உதாரணமாக தமிழக உலகில்தான் ஒருவனுக்குப் பெண்கொடுத்த பெரியோன் மாமன் என்று அழைக்கப்படுகின்றான். இம்முறை பற்றி,

"நயன் மாதுலன் வெம்மையை நண்ணுவான்"

என்று கவி கூறுவது தமிழக ஒழுக்கத்தில் ஆழ்ந்த பற்றையன்றி வேறெதை விளக்கும். இவையெல்லாம் ஒருபுறமிருக்க, தமிழகத்து மாதரின் நிறையுடைமையைப் பெரிதும் உணர்ந்தவர் கம்பரேயாவார் என்று கூறுவனேயானால், அது ஒரு சிறிதும் மிகையாகாது.

"தங்கள் நாயகரில் தெய்வம்
தவம் பிறிதிலை யென்றெண்ணும்
மங்கைமார் சிந்தை போலத் தூயது"

என்று கற்பமைந்த மாதர் மனத்தைப் போற்றுவது.

"தெய்வந் தொழாஅள் கொழுநற்றொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யும் மழை"

என்ற வள்ளுவர் வாக்கினை நினைப்பூட்டுகின்றது.

இன்னும் சீதை தன்னிடம் தன் நாயகன் அணுகி, "தாயுரை கொண்டு, தந்தை சொற்காக்க நான் காடு செல்கிறேன். நீ இங்கேயே இரு" என்று கூறியபோது,

நாயகன் வனம் நண்ணலுற்றான் என்றும்
மேய மண் இழந்தான் என்றும் விம்மலன்
நீ வருந்தலை நீங்குவன் யானென்ற
தீய வெஞ்சொல் செவி சுடத் தேம்புவாள்"

என்று கம்பர் அமைத்திருக்கும் சித்திரம் எத்துணை அழகுடையதாய்த் திகழ்கின்றது! இத்துடன்,

"செல்லாமை உண்டேல் எனக்குரை மற்றும் நின்
வல்வரவு வாழ்வார்க்கு உரை"

என்ற திருக்குறளையும் ஒப்பிட்டு நோக்குங்கள்.

என்னே! தமிழ்ப் பெண்மணிகளின் நிறையுடைமை. இவ்வாறு தேம்பும் இல்லாளைத் தேற்ற இராமன் கூறும் மொழிதான் என்ன?

"காதலி! உன்னையும் உடனழைத்துப் போவது இயலாதே; நானோ காடும் மலையும் கடந்து "செந்நெருப்பைதகடு செய்துபார் செய்ததொக்கும்" பாலை நிலங்களின் வழியே செல்ல நேரும். நின் செவ்விய சேவடிகள் அச்சூட்டைத் தாங்காதே" என்று வருந்துகின்றான்.

இதற்குச் சீதை பதிலுரைக்கும் இடத்தில்தான் தமிழ் அணங்குகளின் வீரம் தோன்றி மிளிர்கின்றது.

"அன்ப! நின் பிரிவினுஞ் சுடுமோ பெருங்காடு" என்று கூறும் செவ்வி கம்பரது கவி நலத்தால் அமைந்த ஒரு பொருளாகும்.

இவ்வாறு தமிழகத்து மாதரின் நிறையுடைமையெல்லாம் தன் உறுபொருளாக்கிக் கொண்ட நங்கையை, அமரர் தம் புகழ் விழுங்கிய அரக்கர்கோன் தூக்கிச் செல்கின்றான். இத்தோற்றத்தைக் கண்முன் தெற்றெனக் கண்ட வான்மீகர் சீதையை முதலில், "அவள் தன் இரண்டு கால்களுக்குமிடையே தன் கையைக் கொடுத்து தன் தோளின்மேல் தூக்கி, பின்னர் அவள் தன் மயிர் பிடித்திழுத்து தன் மடி மீது வைத்துச் செல்கின்றான், இராவணன்" என்று சித்திரந் தீட்டுகின்றார்.

இதே தோற்றம் கவியரசர் கம்பர் கண்ணுக்கும் தோன்றுகிறது.

ஆனால் தமிழகத்து மாதரின் நிறையுடைமையை உணர்ந்த கம்பர் ஆதிகவியை பின்பற்றி அவர் தீட்டிய சித்திரத்தையே ஒப்பித் தானும் கவியமைத்திருப்பாராயின் அந்தோ! பரிதாபம், அவர் பட்டிருக்கும்பாடு பெரும்பாடாயிருந்திருக்கும்.

அவரும், அவரது இராமாயணமும் தமிழகத்தில் இன்றிருக்கும் நிலையில் நின்றிராதென்று நான் சொல்லத் தேவையே இல்லை!

ஆனால் அதற்கெல்லாம் இடம் கொடுத்தனரா?—இல்லை—இடங்கொடுப்பாரா! அவரது மனப்பான்மையின் படியே, இராவணன் சீதையை அவள் குடியிருந்த பர்ணசாலையுடனும் அப்பர்ணசாலை கட்டியிருந்த பூமியுடனும் பெயர்த்து எடுத்துச் சென்றான் என்று கூறியிருக்கின்றார்.

இவ்விடத்தில் ஒரு சிறந்த உண்மை பதிந்து கிடக்கின்றது. "கற்பெனப் படுவது பிறர் நெஞ்சம் புகாமை" என்பது தமிழ்மக்களின் கருத்தாகும்.

> "மண்டிணி ஞாலத்து மழை வளர்ந்தரூ உம்
> பெண்டிராயிற் பிறர் நெஞ்சு புகாஅர்

என்றார் மணிமேகலையார்.

ஒரு பெண்ணை அவள் தலைவனைத் தவிர பிறனொருவன் கண்டு, "இப்பெண் மிகுந்த அழகுடையவளாய்க் காண்கின்றாள். இவளுடன் கூடியிருத்தலன்றோ, பேறு" என்று எண்ணிய காலையிலேயே அப்பெண்ணின் கற்புக்கு பழுது வந்தது என்ற தீவிரக் கொள்கையுடையோர் தமிழர்.

இத்தகைய கொள்கையுடைய தமிழ்ப்பெருமக்கள் எவராவது சீதையை இராவணன் மயிர் பிடித்திழுத்து மடிமீது வைத்து எடுத்துச் சென்றான் என்பதை ஒப்புக்கொள்வார்களா?

பிறன் கைப் புகுந்த காலத்திலேயே அவள் தன் கற்பும், அவள் உயிரும் ஒருங்கே போயிருக்கவேண்டுமல்லவா? அவ்விதம் நிகழ்ந்திருந்தால் இராமாயணம் அத்துடன் முடிவு பெற்றுவிட வேண்டியதைத் தவிர வேறு வழியுண்டா?

இவைகளை யோசித்துத்தான், கம்பர் தன் கைத்திறனைக் காட்டினார். கம்பர் தம் கவிப்பெருமையே பெருமை!

இன்னும் தமிழணங்குகளின் கற்பின் திண்மையை விளக்க ஒரே ஒரு சான்று மட்டும் கூறி முடிக்கிறேன். ஒரு தலைவன் மலர்களை கொய்து கொண்டுநிற்கின்றான். அவனது காதலி, அவன் பின்னால் வந்து, கண்களை பொத்தி நிற்கின்றாள். கண்ணை மூடியது யாரென்றுதெரியாத தலைவன் இது யார் என்று கேட்கின்றான்.

"யார்" என்று கேட்டவுடனே கண் பொத்திய கைகளிரண்டையும் எடுத்துவிட்டு தலைவி தன் கண்களில் நீரருவி சோரக் கலங்கி யழுது கரைகின்றாள்.

"இது என்ன புதுமை! யார் என்று கேட்டால், நான் தான்! என்று கூறி அவனுடன் உறவாடியிருக்கலாமே?" என்று கருதலாம்.

ஆனால் இம்மங்கை நல்லாளின் உள்ளத்திலெழுந்த கருத்துக்களை உருவகஞ் செய்து பாருங்கள். தான் தன் தலைவனது கண்ணைப் பொத்திய காலத்தில், தலைவன் அக் கைகள் ஒருபெண்ணின் கைகள் என்பதை "மெய்தோட்டுப் பயிறல்" என்ற உணர்ச்சியால் அறிந்திருக்கலாம். தன் தலைவன் தன்னைப்போல பல மங்கையருடன் விளையாடி அனுபவித்தவனாய் காண்பதாலன்றோ என்னுடைய கைக்கும் மற்ற மெல்லியலார் கைக்கும் வித்தியாசம் தெரியாது மயங்கி "யார்" என்று கேட்க நேரிட்டது! ஆகவே தன் தலைவனின் காதலைக் கவர்ந்தவர் பலருளர் போலும் என்று கருத, அவ் வெண்ணங்களின் எதிரொலி, கண்களின் வழியே கண்ணீராக பெருக்கி நின்றாள் என்பதே கவியின் பொருளாம்.

இதைத்தான்,

"போரென்ன வீங்கும் பொருப்பன்ன பொலங்கொடிண்டோள்
மாரன் அணையாள் மலர் கொய்திருந்தானை வந்தோர்
காரன்ன கூந்தல் குயிலன்னவள் கண் புதைப்ப
ஆரென்ன லோடும் அனலென்ன வெய்துயிர்த்தாள்

என்று கூறுகின்றார், கவிநாதன் கம்பர்.

அரக்கர், வானரர் தம் பெருமையையும், வீரத்தையும் இவர் புகழ்ந்து கூறும் உரைகள் போற்றத்தக்கதாகும். இராட்சதர் உருவத்தை சித்தரிக்க விரும்பிய கம்பர்,

“காயத்தாற் பெரியர் வீரங் கணக்கிலர் உலகங் கல்லும் ஆயத்தார் வரத்தின் தன்மையளவற்றார் அறிதல் தேற்றா மாயத்தார்” என்று உரைக்கின்றார். அரக்கர் என்ற சொல்லைக் கேட்டவுடனே பயங்கர உருவமுடையவர் என்று கொள்ளும் எண்ணம் இவ்விடத்தில் மாறுபடுகின்றது.

இன்னும் அரக்கரில் ஆடவரைப் பற்றி,

“கழலிலாக் காலும், கால அயிலிலாக்கையும் காந்தும்
அழலிலாக் கண்ணும் இல்லா ஆடவர் இல்லை”

என்றும்,

“நானிலம் அதனின் உண்டு போர் என நவிலின் அச்சொல்
தேனினும் களிப்புச் செய்யும் சிந்தையர்”

என்றும் வரைந்திருக்கிறார்.

இவ்வரக்கரை அடக்கின வானரர் வீரமோ அம்மம்ம மிகப்பெரிது. சொல்லின் செல்வனும் அனுமனது பெருமையும், கடல் கடைந்த வானர வீரனும் வாலியின் பெருமையும் இக்கட்டுரையில் கூற இயலாது.

ஆகவே, கம்பர் தமிழ் மொழியினையும், தமிழ் மக்களையும் தாம் போற்றிப் புகழ்வதுடன் அமையாது, அம்மொழியில் நூல்கள் வழங்கிய திருவள்ளுவர் முதலிய பெரும்புலவர்களைப் பொன்னேபோல் போற்றும் இவர் தம் கவிநலம் மாண்புடையதாகும்.

என் சொல்வேன்!

உடுமலை மு. பெரியண்ணன்

இடையில் குடம் கொண்டு
இங்கித நடை பயின்று
நடையில் நடம் நல்கி
நங்கைதன் கரம சைப்ப
இடையிடை ஒலிக்கு மந்த
இன்னிசைக் காவ ளைகள்
உடலழகைப் பருகு வெனும்
உரையதனை என் சொல்வேன்!

துல்லிய ஆடை பூண்டு
துணைக் கொரு கச்சுடுத்து
மெல்லியல் மேனி யன்னாள்
மேலாக்கை எடுத்து வீசி
'கல்'லென்று ஒலிக்கு மந்த
காற் சிலம்பைச் சுதிகூட்டி
'நில்'என்று கூறு மவள்
நேர்த்தியதை என் சொல்வேன்!

மல்லிகை மணம் கமழ
மதிமுக எழில் திகழ
நல்லிசை பரப்பு மந்த
நங்கைதன் முகம் நெகிழ
அல்லிநேர் விழியினள் தன்
அங்கையை அசைத்தசைத்து
நல்வரவு கூறு மவள்
நாணமதை என் சொல்வேன்!

சிறுகதை

கலங்கரை விளக்கம்

"சுமதி"

கடற்கரைக்கு வரும்போதெல்லாம் அந்தக் கலங்கரை விளக்கத்தைப் பார்ப்பதில் எனக்குத் தனி ஒரு ஆசை. அதை நிலைநாட்டிய மனிதனின் நெஞ்சில் அரசாளும் கடமை உணர்ச்சிதான் எவ்வளவு சிறப்பு வாய்ந்தது! "மனிதனுக்கு மனிதனை விட மேலானது ஒன்றுமேயில்லை" என்பது ஒன்றும் பொய்யல்லதான்.

பட்டு மழையாகப் பொழிவதைப் போல பால் நிலா வீசிக்கொண்டிருந்தது. வெள்ளி உருகி ஓடும்போது நடனமாடிக்கொண்டே ஓடினால் எப்படியிருக்கும்! அதைப்போலத் தான் கடலில் அலைகள் நடனமாடிக்கொண்டிருந்தன. உடலின் சோர்வை யெல்லாம் அள்ளிப் பறக்கும் மெல்லிய காற்று; பார்க்கும் இடமெல்லாம் பளபளக்கும் மணற்காடு. அடடா! பார்க்க அற்புதமான காட்சி! இயற்கை பகலெல்லாம் எங்கோ மறைத்து வைத்திருந்த தன் அழகுச் சிமிழை—மாணிக்கப் பெட்டகத்தைத்—திறந்து பார்ப்பதைப்போல இருந்தது அந்த அழகுக் காட்சி.

என் எண்ணமெல்லாவற்றையும் இயற்கையின் இந்த ஓவிய அழகில் மிதக்கவிட்டு நான் என்போக்கில் நடந்து கொண்டிருந்தேன். அந்த நேரத்தில்தான் அந்தக்குழந்தையின் கதறல்—வாள் வீச்சைப்போல—அங்கு உயிர் வாழும் அமைதியைக் கிறிக்கொண்டு புறப்பட்டது. என் வழி திரும்பியது.

அங்கே..........

நொறுங்கிச் சிதறலாகிக் கொண்டிருந்த ஓட்டைப் படகு ஒன்று கவிழ்ந்து கிடந்தது. அதற்குப் பக்கத்தில் தான் அந்த மனிதன் ஒரு குழந்தையை வைத்துக்கொண்டு சமாதானப்படுத்த முயன்று கொண்டிருந்தான். உலக சமாதான முயற்சியைப்போல அவனுடைய சமாதான முயற்சியும் எளிதில் வெற்றி பெறுவதாயில்லை. இன்னும் சற்று நெருங்கினேன். ஆம்! அவன்தான்—அந்த மனித மிருகம் கந்தன்தான் அங்கே உட்கார்ந்திருந்தான். எனக்குள் அருவருப்பு மண்டியது, இருந்தாலும்...

அந்தக் குழந்தையைப் பார்த்தேன். கருவண்டு விழிகளிரண்டும் கசங்கிய மலராகி விட்டிருந்தன. பஞ்சடைந்த அதன் தலை மயிர்ச் சுருள்கள் காற்றில் அசையும்போதெல்லாம் மலர்க்கொம்பு ஒன்று அசைந்தாடுவதுதான் என் நினைவுக்கு வந்தது. அந்தச் சின்னஞ்சிறு முகத்தில் ஒளிவீசும் கரைபடியாத அழகு யாரையும் மயக்குவதாயிருந்தது. குழந்தை...!வஞ்சனையின் மணமறியாத மனித உருவத்தின் கொழுந்தல்லவா? அந்த அழகுச் செல்வத்தை அணிசெய்து பார்க்க அவனிடம் ஒரு சிறு சட்டைக்குக்கூட வழியில்லை. அவன் அன்றாடக் கூலி; துறைமுகத்தில் மூட்டை தூக்கி பிழைக்கும் ஏழை. வெறும் வயிற்றைக் கழுவவே முதுகெலும்பு முறிய பாடுபட வேண்டியிருக்கிறதே! சட்டைக்கு வேறு எங்கே போவான்? அந்த அரை நிர்வாணப் பிரகிருதி? ஆனல் இத்தனை அழகான குழந்தை இவனுக்கேது...? கரிய உருவம்—தடித்த உதடுகள்—மலை முடிச்சுகளை நினைவூட்டும் கன்னத்து எலும்புகள்! அந்தப் பயங்கர உருவத்துக்கு இத்தனை அழகான குழந்தையா? இருக்காது...ஒரு சமயம் நகைகளுக்கு ஆசைப்பட்டு இதை எங்கேனும் திருடியிருப்பானே...? இவன் திருடனென்றால் குழந்தையை அழவிட்டு வேடிக்கை பார்க்க முடியுமா?...என் சிந்தனை சுழன்றோடியது. இந்த போராட்டம் என்னுள் நடந்துகொண்டிருந்தபோது அந்த உடைந்த படகின் உள்ளிருந்து ஒரு பெண் "ஏ......மச்சான்..." என்று அழைத்தாள்.

"எம் புள்ளே! நான் வர்ரேன், நீ ஒன் வேலையைப் பார்" என்று அங்கிருந்தபடியே பதில் கொடுத்தான் அவன்.

இதற்கிடையில் அந்தக் குழந்தை தன் அழுகையை விட்டு விட்டு அவனுடன் விளையாடத் துவங்கியது. அவனும் குழந்தையானன். எனக்கு வியப்பு ஒருபுறம்; சந்தேகம் மற்ரொரு புறம்.

"மனித வாழ்க்கையே ஒரு புதிர்! உலகில் ஒவ்வொரு மனிதனின் வாழ்விலும் நாம் எளிதில் தெரிந்துகொள்ள முடியாத—ஆனல் தெரிந்துகொள்ளவேண்டிய அனுபவங்கள் எவ்வளவோ உண்டு. இந்த உண்மையான அனுபவ முத்துக்களை சேகரித்து, தரம் பிரித்து, கோவைப்படுத்தியிருந்தால், மனித வாழ்வு எவ்வளவோ முன்னேறி இருக்கும். ஆனல் அறியாமையால்தானே என்னவோ யாரும் இவற்றை நேரிடையாகத் தெரிந்துகொள்ள முயலாமல் திருட்டுத்தனமாக எதையும் மேலோட்டமாகப் பார்த்து விட்டு கற்பனைகளைப் பரப்புகிருர்கள். நாம் அப்படியிருக்கக்கூடாது" என்றெண்ணிய நான், முன்ஞெரு நாள் நடந்த அந்தப் பயங்கர சம்பவத்தையும் தள்ளி வைத்து விட்டு, அவனிடம் பேச்சுக் கொடுத்தேன்.

அவனை நெருங்கி முதலில் நானே பேச்சைத் தொடங்கினேன்,

"ஓ...நீயா அய்யா? நீ இந்த துறைமுகத்திலே வேலெ பார்க்கிறே இல்லே? இதான் ஒன் வீடா?"

"ஆமாங்க; இதான் நம்ம பங்களா!"

வானைப்பார்த்து சிரிக்கும் மாடி வீடுகள்; பக்கத்திலே தரையோடு தவழும் குடிசைகள்; இது இன்றையச் சமூக அமைப்பின் சாபக்கேடு. பாவம்...! இந்த மனிதனுக்கு அது கூட கிடையாது. ஆனல் இந்த உடைந்த படகைத்தான்

இவன் பங்களா என்கிறான். எனக்கு சிரிப்புதான் வந்தது அவன் பேச்சைக் கேட்டு. அந்த சிரிப்பில் ஏதோ தென்பட்டிருக்க வேண்டும். அதனால்தானோ என்னவோ அவன் கேட்டான்:

"ஏன் சிரிக்கிறீங்க...? எங்களுக்கு இதாச்சும் நெழலே குடுக்குது. இதுகூட இல்லாத எத்தனையோ ஏழைங்க சாலையில் குடும்பம் நடத்துறது ஒங்களுக்குத் தெரியாதா?

எனக்கு என்னவோ செய்தது. பார்த்தால் இந்த மனிதன் கரடுமுரடான பாறையைப்போல் காணப்படுகிறான். ஆனால் அவனிடம் பேசத் தொடங்கிவிட்டாலோ, அவன் பேச்சில்தான் எத்தனை நகைச்சுவை! எத்தனை அறிவுச் சித்திரங்கள், பாறையிலிருந்து குளிர்ந்த அருவி பிறப்பதைப் போல...

நான் மேலே துவங்கினேன்.

"ஏம்பா, இது ஒன் குழந்தைதானே? எங்கே, இப்படி கொடு...!"

"சேச்சே! நீங்க ஏன் இதைத் தொடணும்? எந்தப் பய புள்ளையோ...? நீங்கெல்லாம் பெரிய மனுசருங்க; ஒங்களுக்கு வேண்டாங்க"

எனக்குத் திக்கென்றது. உள்ளத்தின் ஆழத்தில் யாரோ தாழ்ப்பாள் போடுவது போல ஒரு உணர்ச்சி என்னைத் தாக்கியது. நான் கேட்டேன்:

"அப்படின்னா... இது ஒன் குழந்தையில்லையா?"

"இல்லேங்க...; என் பெஞ்சாதி பெத்தெடுத்த முத்துங்க"

எனக்குச் சிரிப்பு வெடித்துக்கொண்டு வெளிக் கிளம்பியது. நல்ல மனிதன்...! தன் மனைவி பெற்றெடுத்த பிள்ளை தன்னுடையதல்லவாம்; புதுமையான வழக்கறிஞன் தான் இவன்! ஒரு வேளை...?

ஏன் சிரிக்கிறீங்க...? நான் ஒன்னும் பொய் சொல் லல்லெ; உண்மைங்க. இது என் புள்ளே இல்லெ; என் பெண்சாதியோட காதலிலே பூத்த பூவு..."

வியப்பால் என் கண்கள் விரிந்தன. நெற்றி மேல் நோக்கிநெரிந்தது, நான் கேட்டேன்:

"உண்மையா...? ஆச்சரியம்...!"

இதிலே என்னங்க ஆச்சரியம்; அபலைங்க வாழ்வே வெலெ பேசுற—பேச முடிஞ்ச—ஆளுக உசிரோட இருக் கிறவரையிலெ...?

இப்படி அவன் கேட்டதும் எனக்கு என்னவோ போலிருந்தது. அதற்குள் அந்தப் பெண் தங்கள் படகு வீட்டை விட்டு வெளியில் வந்தாள்..."சோறு தின்ன வான்னு எத்தினெ நாழி கூப்பிடறது?..." என்று சற்று இரைந்தாற்போல் முனகிக்கொண்டே வந்தாள் அவள். அப்போது அவளை நிலா வெளிச்சத்திலே என்னால் நன்ரு கப் பார்க்க முடிந்தது.

கட்டுக்குலையாத உடல்—சற்றே கறுப்புதான் என்ரு லும் அழகு பொங்கும் முகம்—கவிதை உலவும் விழிகள் —இவைதான் அவள். இளமைப் பருவம் அவளை விட்டு இன்னும் எட்டி ஓடிவிடவில்லை என்ருலும், ஏழ்மைக்கோலம் அதற்குத் திரை போட்டு மறைக்க முயன்று கொண்டிருந் தது. என்னை அவ்விடத்தில் கண்ட அவள் என்ன நினைத் தாளோ தெரியாது; உடனே திரும்பிச் சென்று விட்டாள்.

என் சிந்தனை சிலம்பம் விளையாடத் தொடங்கியது. "இயற்கைக்கு இதயம்தான் இல்லையென்றால் அறிவுமா இல்லை? அது நோக்கமில்லாமல் படைக்கிறது; உணர்ச்சியில்லாமல் அழிக்கிறது! இல்லாவிட்டால் இவளிடம் ..?

அது கிடக்கட்டும்; அவனுக்கு அவள் வயதில் கூடப் பொருத்தமற்றவள்தான்.

நான் தொடர முடியவில்லை. அவன் இடையிலேயே தொடங்கிவிட்டான்.

"இவதான் அய்யா, என் பெஞ்சாதி! இவ புள்ளெதான் இது."

"அப்படின்னு இதுவி ப . சா ..?" என்றால் உணர்ச்சியைக் கட்டுப்படுத்த முடியவில்லை; சொற்கள் அரைகுறையாகவே நின்றுவிட்டன, ஆனாலும் அவன் புரிந்துகொண்டான்; கோபிக்கவில்லை. உணர்ச்சி ததும்ப கரகரக்கும் தொண்டையில் அவன் பேசினான்.

"இல்லெங்க; அவளோட தெரியாத்தனத்திலே வயித்துக் கொடுமையிலே—பொறந்தது இது. அவ ரொம்ப தங்கமானவ. என் இருட்டு வாழ்விலே அவ வெளக்கு மாதிரிங்க. என்னமோ சந்தர்ப்பக் கோளாறு; அம்புட்டுத்தான்." எவ்வளவு பாமர மனிதன்! ஆனால் எத்தனை ஆழமானவன்! என்ன குரூரமான உடற்கட்டு; ஆனால் அதில்தான் எத்தனை பரந்த உள்ளம்! ஆனால்—

இடையிடையில் அன்றொரு நாள் நடந்த அந்தக்கொடூரம் நிறைந்த அந்த நிகழ்ச்சி என் நினைவில் தலை நீட்டாமலில்லை. ஆனால் அதை வேறு எப்படி இடையிலே தொடங்குவது? இப்படி யெல்லாம் என் எண்ணத்தைச் சுழலவிட்டுக்கொண்டே அவனைக் கேட்டேன்:

"நான் கேட்கிறேன்னு கோவிக்காதே; இந்தப் பெண்ணைக் கட்டிகிட்டதாலே ?"

"என்ன நன்மேன்னுதானே கேக்கிறீங்க? நல்லா கேளுங்க. மனுசனுன்ன மத்தவங்களோட சேர்ந்துவாழப் பொறந்தவன்தானுங்களே? ஒறவு ஒடம்போட மட்டும் போறதில்லிங்களே? மனசுக்கும் ஒரு தெம்பு—குளிர்ச்சி—வேண்டியிருக்குது பாருங்க. என் நொண்டியடிக்கிற மனசுக்கு இவதான் ஊனிக்கிற கம்பு மாதிரி. நானும் சமயத்திலே கோவம் வந்துட்டா—குடிக்கக் கஞ்சியில்லாத போது—அடிச்சிகூட விடுவேனுங்க. ஆனா மவராசி ஒண்ணையும் மனசிலே போட்டுக்காம மறந்திடுவா. நானும் யாருக்கோ பொறந்தேன். எனக்கு அம்மாவையே தெரியாது; அப்பாவோ கொஞ்சகாலத்திலே செத்துப்போயிட்டாரு. அவ்வளவுதான்; அன்பு அப்பொறம் எங்கே கிடைக்கும்? எல்லா ஏழைங்களையும் போல தெருவெல்லாம் வீடா—புழுதியே விளையாட்டிடமா அலைஞ்சேன். எச்சி இலையும் அப்பப்போ கூலி வேலை பாத்து அதிலே கெடைச்ச ஓரணா ரெண்டணா காசும்தான் என்னை வளத்து மனுசனாக்கிட்டுது. அன்புங்கிறது வெலைக்குக்கூட கிடைக்காத எனக்கு இவதான் கெடைக்க முடியாத சொத்து. இவளுக்காவ என் உசிரைக் கூட விட தயாருங்க."

இந்த மனிதன்தான் உண்மையான மனிதன்; ஆனால் ஏனோ அன்றொரு நாள் காலை :

ஒரு நாளின் அரும்பப் பருவம். வைரச் சுடர் தெறிக்க வரும் இளஞ்சூரியன் வைகறையழகியின் முகம் சிவக்க முத்தமிட்டுத் தன் ஒளி முகத்தைத் திருப்பினான். உலகம் தன் இருள் போர்வையை உதறிவிட்டு கலகலவென எழுந்தது முன்னே. நான் காலை உணவுக்காக 'கிளப்'பில் நுழைந்து கொண்டிருந்தேன். இதே கந்தன் வெளியே சாலை ஓரத்தே நின்றுகொண்டிருந்தான். உள்ளே போய் சாப்பிட்டுக் கொண்டிருக்கும்போது வெளியில் ஒரே கூச்சல். நானும்

மற்றவர்களும் ஓடிவந்து பார்த்தோம். இவன் யாரோ மற்றொரு மனிதனின் குரல்வளையை நெரித்துக் கொண்டிருந்தான். அந்த ஆளின் கண்கள் வெளியில் பிதுங்குவது போல பார்க்கவே பயங்கரமாக இருந்தன. பரிதாபகரமான முறையில் ஓலமிட்டுக்கொண்டிருந்தான் அவன். நான் நடு நடுங்கி விட்டேன். மேலும் பார்க்கப்பிடிக்காமல் உடனே திரும்பிவிட்டேன். அந்த மனிதனைப் பார்த்தால் சற்று உயர்ந்த நிலையில் உள்ளவனுகத் தோன்றினன். இந்தக் கூலிக்கார கந்தனே ஏழ்மையென்னும் உலைக்களத்தில் கிடக்கும் துருப்பிடித்த இரும்புத் துண்டு. "சீ. தன்னைப் போன்ற மற்றொரு மனிதனைக் கொலைகூட செய்ய அஞ்சாத இவன் மனிதனு...? பண்பு அறியாத மிருகம் ! மனிதன் தான் என்றால், இவன் நாகரீகம் தெரியாத காட்டுமிராண்டி!" என்று நான் அன்றைக்கு நினைத்தது இன்றும் நினைவிலிருக்கிறது. ஆனல் அதையொன்றும் வெளியில் காட்டிக் கொள்ளாமல், "இந்தப் பெண்ணும் நீயும் ஒன்று சேர்ந்த வரலாற்றைத்தான் சொல்லேன். கேட்கலாம்." என்றேன். அவனும் சொல்லத் துவங்கினன். அவன் சொன்ன கதை:

* * * * *

அவள் ஒரு கிராமத்துப் பெண். இயற்கைப் பிறப்பிக்க—வறுமை தாலாட்ட வளர்ந்தவள். உழைப்பையே செல்வமாகப் பெற்ற குலத்திலே பிறந்தாலும் இன்றைய சமுதாய சட்டப்படி அவள் தாழ்ந்த சாதியைச் சேர்ந்தவள். சின்னஞ் சிறு சிட்டாக அவள் திரிந்து பறந்து வாழ்ந்தபோது வெளியுலகம் அவளைக் கவனிக்கவில்லை. ஆனல் எல்லாவற்றிலும் மாற்றம் காணும் காலம் அவளையும் வளர்கக, மாற்ற—மறக்கவில்லை. பாவாடை கட்டும் பருவம் தாண்டி அழகு குலுங்கும் இளமைப் பூங்காவில் அடி வைத்தாள். காலமும் பருவமும் தம் ஓவிய எழிலை அவள் மீது சிறக்கத் தீட்டியிருந்தன. மற்ற உயர்சாதிப் பணக்கார வீட்டுப் பெண்களைப் போல் வீட்டில் அடைபட்டுக் கிடக்காமல், வாழ்க்கைப் போராட்டப் புயலில் சிக்கி உழலும் சிறு துரும்பாக வெளியில் அலையவேண்டியிருந்த காரணத்தால் மற்றவர் கண்ணில் அடிக்கடி படவேண்டிய கட்டாய நிலையிலிருந்தாள்.

பார்ப்பவர் கண்களுக்குத் தூண்டிலானாள் அவள். குறிப்பாக அவ்வூர் இளைஞர் கூட்டத்தின் இடையில் தென்றல் தவழும் மல்லிகைப் பூங்காவாக—இல்லை! எழில் பூத்திடும் சித்திரமாகத்தான்—காட்சி தந்தாள் அவள். இந்தப் பட்டுப் பூச்சியை விட்டில் பூச்சியாக்கத் திட்டமிட்டவர்கள் பலர். அவர்களில் அவ்வூர்ப் பெரிய பண்ணையார் மகன் வெற்றிக்கொடி நாட்டினான். கடற்கரை—காதல் சினிமா — மாடிவீட்டு பலகணி — கட்டிலறை — பஞ்சு மெத்தை — இவை அவர்கள் காதலை வளர்க்கவில்லை. ஏழ்மை—அறியாமை — இயற்கையின் தூண்டுதல் — இளமைக் குறும்பு—இவைதாம் அவர்களைச் சிறைப்படுத்தின. அஞ்சலை—அதுதான் அவள் பெயர்—கொஞ்சும் கிளியானாள். நாசகார சமூகத்தின் நஞ்சுக் கொள்கையால் வஞ்சிக்கப்பட்ட வகுப்பிலே பிறந்தவள் சிங்காரச் சீமானின் ஒய்யாரப் பொம்மையானாள். வாழ்வு வஞ்சகத்தோடு விளையாடியது; அறியாமை சூதோடு போட்டியிட்டது; வறுமை வளமையோடு நீந்தியது. பலன்...?

காதலின் சின்னம் அவளின் அடிவயிற்றில் கருவாகத் தவழத் தொடங்கியது. பண்ணையார் மகன் அவளைப் பொறுத்தவரைப் பதுமையானான்; காலப்போக்கில் நினைவின் நிழலாகவே மாறி விட்டான். அவளோ துடித்தாள்—புரண்டாள்—என்னென்னவோதான் செய்தாள். ஆனால் கருவும் உருவில் வளர்ந்தது, அரும்பு மலராவதைப்போல. அவளை வளர்த்து ஆளாக்கிவிட்ட காலம் அவளைக் காட்டிக் கொடுக்கவும் தவறவில்லை. ஊரார் தூற்றினர்; உறவினர் துரத்தியே விட்டனர். அவளோ வயிறு எரிந்தாளே தவிர வாய்திறக்கவில்லை; பெண்மையில் நன்றி மறவாத தன்மை மட்டுமல்ல, உண்மையைச் சொன்னாலும் யார்தாம் நம்பப் போகிறார்கள் என்ற காரணத்தாலும்தான். உண்மை—நீதி என்பதெல்லாம் சமூகத்தில் அவரவர் மதிப்பைப் பொறுத்தவைதானே! அவளால் வேறு என்ன செய்ய முடியும், ஊமையாய் இருப்பதைத் தவிர...? கடைசியில் ஊரைவிட்டே ஓடினாள்—இல்லை!—விரட்டப்பட்டாள்.

ஊரை விட்டு ஓடிய அவளுக்கு அண்ட நிழலில்லை; ஒன்ற ஒதுக்கிடம் கிடையாது. இடையில் எங்கோ ஒரு சத்திரத்தில் இந்தக் குழந்தையைப் பெற்ருள். மறுபடியும் அவள் வாழ்வில் ஓட்டந்தான். அவள் ஏழை, தாழ்த்தப் பட்டவள்: அதிலும் வழுக்கி விழுந்தவள். அவளுக்கு வாழ்வேது? அவளை நம்புவாருமில்லை; வேலைதந்து காப்ப வரும் கிடையாது. கடைசியில் வேலையற்றவருக்கெல்லாம் வாழ்வளிக்கும் பிச்சைக்காரக்கோலம் ஆசையுடன் அணைக்க வரும் தாயைப்போல, அவளை ஆட்கொண்டது. தான் பெற்ற குழந்தையையே கைமுதலாகக்கொண்டு அந்தப் பட்டினிப்பட்டாளத்தில் பங்குதாரர் ஆனுள். எப்படியோ காலத்தின் கழுத்தைப் பிடித்துத் தள்ளிக்கொண்டே இந்தப் பட்டினத்துக்கு வந்து சேர்ந்தாள். சாலையோர வாழ் விலே சரண் புகுந்து திரியும் சத் சங்கத்திலும் ஒரு உறுப் பானுள்; காலம் நடந்து கொண்டிருந்தது.

அன்ருெரு நாளிரவு...

சாலையோரத்தில் அவள் படுத்துத் தூங்கும்போது யாரோ—அல்லது—எதுவோ காலில் உராய்வதாக உணர்ந்த அவள் திடுக்கிட்டு விழித்துப் பார்த்தாள். வெறிதுள்ளும் விழிகளோடு ஒரு பெரிய மனிதன்—வயதில் அல்ல, பணத் தில்—அவள் காலைப்பிடித்தான். அவள் வெலவெலத்துப் போனுள். உள்ளம் நடுங்கியது; உடலெல்லாம் அதிர்ந்தது; அவள் இப்போதெல்லாம் பணத்திமிரை—படாடோபத்தை —செருக்கை—வஞ்சகத்தைப் புரிந்துகொண்டாள்; வெறுத் தாள். வாழ்க்கை அவளைப் பொறுத்தவரை கேளிக்கைக் கூடாரமல்ல; சூதாட்டமுமல்ல; போராட்டம். கடலில் ஓயாத அலை ஒழியாத போராட்டம் நிகழ்த்துவதைப்போன்ற நீண்டதொரு போராட்டம்! குமுறும் எரிமலையாகிவிட்ட அவள் அவனை அப்பால் செல்லுமாறு அதட்டினுள்; சத்தம் போடுவதாகப் பய முறுத்தினுள். ஆனுல் அடுத்த விநாடி அவனது இரும்புப் பிடியில் கைதியானுள். அவன் அவளது வாயைப் பொத்தி அழுத்திக்கொண்டு அவள் கையில் ஒரு

எட்டணு நாணயத்தைத் திணித்தான். அதை வீசியெறிந்து விட்ட அவள் முரட்டுத்தனமாகத் திமிறினுள். போராட்டம் வலுத்தது. சந்தடிகேட்டுப் பக்கத்தில் படுத்திருந்தவர்கள் விழித்து எழுந்தனர். அந்தக் கூட்டத்தாரில் கந்தனும் ஒருவன்.

மற்றவர்கள் விழித்துக்கொண்டதைப் புரிந்து கொண்ட அந்த மனிதன் ஓடத்தலைப்பட்டான். விழித்துக்கொண்டவர்கள் அவனைப் பின்தொடர்ந்து ஓடவும் அஞ்சினுர்கள். அந்த ஏழைகள் அந்த நேரத்தில் எப்படித்தான் ஓட முடியும்? ஆனுல் கந்தன் மட்டும் துணிச்சலோடு கொஞ்சதூரம் பின்னுல் ஓடி அவனை யாரென்று தெரிந்து கொண்டு திரும்பினுன். அவளையும் நெருங்கி நடந்ததைக் கேட்டுத் தெரிந்து கொண்டான்.

பொழுது விடிந்தது. அந்தப் பெரிய மனிதன் அங்கு ஒரு 'ஓட்டலில்' சாப்பிட நுழைந்து கொண்டிருந்தான். அந்த சமயத்தில் கந்தன் அவனைப்பிடித்துக் கொண்டான். சரியான உதை. கடைசியில் கந்தனது கால்களை வாரிவிட்டு விட்டு அந்த மனிதன் ஓடிவிட்டான். அதன் பிறகு அவனைக் கந்தன் பார்க்கவேயில்லை.

* * * * *

இதை அவன் சொன்னபோது நான் அது எந்த இடமென்று மிகவும் அவசரம் அவசரமாகக் கேட்டேன். அவன் இடத்தைச் சொன்னவுடன் எனக்குத் தூக்கிவாரிப் போட்டது. நான் அன்று பார்த்த அதே கோரச் சம்பவந்தான் அது, என்று எனக்குத் தெளிவாகத் தெரிந்தபோது எனக்கு அவன் மீது கோபம் பிறக்கவில்லை; மாருக நன்றியுணர்வுதான் பொங்கியது. ஏழ்மையே வெறியாக உருவானுல்—வறுமையே புரட்சிக் கொடி உயர்த்தினுல்—தன் மானம் அதற்குத் தலைமை தாங்கவும் முற்பட்டு விட்டால்—பலன் என்னவோ பயங்கரமானதுதான்; என்பது உண்மையிலும் உண்மை.

உற்சாகம் நிரம்பியவனுய் "அப்புறம்...ம்...?" என்றேன் அவனும் தொடர்ந்தான். அவன் சொன்னவை:

* * * * *

பிறகு அவளை அவன் அழைத்துக்கொண்டு வந்து தற்போது குடியிருக்கும் அந்தப் படகு வீட்டில் குடியேற்றினுன். அதன் பிறகு அவளும் ஏனே அவனைவிட்டு விலக விரும்பவில்லை; ஓய்வும் அமைதியும் காணுத அவள் வாழ்வு அந்தப் பொந்தினுள்ளே மகிழ்ச்சியோடு மலரத் தொடங்கிற்று. வந்து சேர்ந்து நான்கைந்து நாட்களாகி யிருக்கும். அன்றிரவும் இதுபோல முழுநிலவு. அவள் அந்த உடைந்த படகின் ஓரத்தில் சாய்ந்தபடி படுத்திருந்தாள். நிலா அவள் மீது விளையாடிக் கொண்டிருந்தது. பால் நிறப் பளிங்குச் சிற்பத்தை அவன் அவளிடம் கண்டான். இத்தனை நாட்களிலும் எங்கோ மறைந்து கிடந்த ஆண்மை அவன் உள்ளத்தில்—உடலில்—நரம்புக் கூட்டத்தில்—தசைக்கோளங்களில்—யாழொலியை மீட்டியது. பயந்து கொண்டே அவன் அவளைத் தொட்டான். இந்தத்தடவை அவள் மருள வில்லை; துவளுவதுபோலப்பட்டது அவனுக்கு. இயற்கையின் தேவையால் உந்தப்பட்ட ஒரு இதயத்தை அவன் புரிந்து கொண்டான்.

அன்று முதல் அவர்கள் கணவனும் மனைவியும். உலகம் அவர்கள் கூட்டுறவை ஒப்புக்கொண்டதோ இல்லையோ அதைப்பற்றி அவர்கள் கவலைப்படவில்லை.

அவர்கள் வாழ்வில் வஞ்சனையில்லை; வெளி மயக்குமில்லை ஆனல் மனிதத் தன்மை நிறைய இருந்தது.

* * * * *

கதையை அவன் முடிக்கவும், படகைவிட்டு அந்தப் பெண் வெளியே வரவும் சரியாயிருந்தது.

அந்த ஓட்டைப்படகை நோக்கினேன் நான். அழியாத அன்பால் துடிக்கும் இரு உள்ளங்கள் அதனுள் அமைதியோடு கண்வளர்வது போன்ற கற்பனை என் சிந்தனையை வாரிச் சென்றது. என் உள்ளத்தில் உணர்ச்சி அலை பாய்ந்தது.

நான் எழுந்து நன்றி கூறிவிட்டு நிமிர்ந்தபோது என் கண்களில் முதல் முதலில் பட்டது அந்தக்கலங்கரை விளக்கந்தான். மறுமுறையும் அந்த விந்தை மனிதனைத் திரும்பிப் பார்த்தேன். என் உள்ளம் இப்படிச் சொல்லியது:—

ஊரார் கண்ணில் அவன் கூலி; எனக்கு அவன் மனிதன்; ஆனால் அவளுக்கு...?

திசை தப்பிய கப்பலுக்கு உய்யும் வழிகாட்டி நிற்கும் கலங்கரை விளக்கம்!

பஞ்ச தந்திரமும், ஐம்பெருங் காவியங்களும்

தந்திரம்:	காவியம்:
நல்வினைப்பயன் (சுகிர்த லாபம்)	சீவக சிந்தாமணி
நண்பர்களைப் பிரித்தல் (மித்திர பேதம்)	குண்டலகேசி
அடுத்துக்கெடுத்தல் (சந்தி விக்கிரகம்)	வளையாபதி
பேறு இழத்தல் (லப்தஹானி)	மணிமேகலை
ஆராயாது செய்தல் (அசம்பிரேட்சியகாரித்துவம்	சிலப்பதிகாரம்

கனவொன்று கண்டேன்!

ஆர். மல்லப்பிள்ளை

1

வண்ண மதிமுகம் தன்னுள் இரு
மின்னென வேல்விழி கண்டேன்!
மின்னொளி தாக்கியே வீழ்ந்தேன்! பின்பு
என்மதி சென்றது எங்கோ!

2

கன்னல் நிகர்த்த மொழியாள் அவள்
கண்சொல்லும் வார்த்தைகள் கண்டேன்!
திண்ணிய நெஞ்சினேன் நானும் உளம்
தியங்கிக் கலங்கினேன் கண்டாய்!

3

ஆம்பல் நிகர்த்தசெவ் வாயாள் தன்னின்
அஞ்சுக மென்மொழி கேட்டேன்!
ஏங்கியே வாடினேன் இங்கு! இனி
எப்போது கேட்போமோ என்று!

4

அன்னத்தை விஞ்சிடும் வஞ்சி அவள்
அழகிய மென்னடை கண்டேன்!
என்னத்தைச் சொல்லுவேன் தோழா! எழில்
எண்ணத்தைக் கொண்டது போடா!

5

காதில் பொற் குண்டலங், கண்டேன்! எழிற்
கன்னங் குழியிட ஆங்கே
என்னெஞ்சம் கொள்ளைகொண் டாளே! இவள்
இன்முறு வல்தனை வீசி!

6

பஞ்சமணி* நெஞ்சினிற் பாங்காய் மணி
கொஞ்சித் தவழ்ந்திடக் கண்டேன்
வஞ்சி மலையன்ன மார்பை நெஞ்சம்
கொஞ்சித் தழுவிட விஞ்சும்!

7

மின்னிடை மேகலை[3] யார்ப்ப எழில்
மேனி யசைந்திடக் கண்டேன்!
மேனி யசைந்திடும் போது மனம்
மேவி யசைகுது நண்பா!

8

காலிற் சிலம்பொலி[4] கேட்டேன்! தையல்
கையினிற் பொன்வளை[5] கண்டேன்!
சிலம்பொலி தன்னொடு சேர வளை
கலகல வென்றது கண்டாய்!

9

மெல்லியள் பக்கலிற் சென்றே நான்
மேவி நீ யாரெனக் கேட்டேன்!
கள்ளங் கபடில்லாக் கோதை உள்ளம்
துள்ளியே வந்தனள் மான்போல்!

10

'கன்னித் தமிழெ'னச் சொன்னாள்! அந்தக்
காரிகை தன்னைநான் கண்டேன்!
அன்னைத் தமிழடா! என்றே மனம்
ஆர்ந்திட எண்ணினேன் தம்பீ!

11

உள்ளத்தில் கள்ளமில் லாத உயர்
ஒப்பற்ற காதலான் மன்னி
அன்னையே! என்றுநான் கூவ மிக்க
அன்போடு கூறினள் கேட்பாய்!

12

"கன்னித் தமிழ்"நானே கண்ணே! என்றும்
பொன்றுது வாழ்வேனென் சொன்னேன்!
என்றன்னை ஓடியே போனாள்! நெஞ்சம்
ஏங்கிக் கனவென்று நொந்தேன்!.

குறிப்பு:— 1,2.3,4.5—ஐம்பெருங்காப்பியங்கள்—

* செம்பஞ்சுக் குழம்பைத் தம் மார்பின்மீது பூசி ஒப்பனை செய்வது பண்டைத் தமிழ் மகளிர் வழக்கமாகும் இஃது. "பஞ்சினை அணிவார் பால்வளை தெரிவார்" என்னும் கம்பனின் இராமாயண அடியால் பெறப்படும்.

கலைக்கடிதம் "மதனன்"

★ விண்ணப்பம்

தமிழ்த்தாயே! தனயர்கள் வணங்குகின்றோம்; தலை குனிகின்றோம் தங்கள் நிலைகண்டு. ஆயினும் தாழ்மையுடன் விண்ணப்பித்துக் கொள்ளுகிறோம். தமிழகத்தின் தாயே! வந்தாரை வரவேற்று இன்சொல் இயம்பி உபசரிப்பவர்கள் தான், தங்கள் தனயர்களாகிய நாங்கள். இவ்வழக்கு பண்டைக்காலத்தில் மட்டுமல்ல; இப்போதுங் கூட.

ஆனால், எங்கள் தாயகத்தில், தென்றலெனத் தவழ்ந்து, தீஞ்சுவையைத் தந்து, தித்திக்க வைக்கும்—தங்கள் மொழி—எங்கள் மொழியாம் தமிழோடு மாற்று மொழி கலந்து மனதை நோகச் செய்வதை நாங்கள் விரும்பவில்லை. மாற்றுமொழியை—அதிலும் அதிகமாக உலவும் வடமொழியை ஏன் விரும்பவில்லை என்று கேட்டால், அதற்கு நாங்களளிக்கும் ஒரே பதில் இதுதான். "எந்தாய் மொழியாம் தமிழ் அமிழ்தினும் இனிது. அதுவே எங்கள் மூச்சு—ஆற்றல் எல்லாம். அத்தகைய மொழியின் இனிமையை—எங்கள் மூச்சு—ஆற்றலில் மாசுபடுத்த விரும்பவில்லை. மாசுபடுமாறு செய்யவும் மாட்டோம்.

அதனால்தான், தங்கள் நாட்டில் நிலவி வரும் மாற்று மொழிகளுக்கு இடங்கொடுத்து, இன்று இனிமையற்ற தமிழின் நிலைகண்டு, தவியாய் தவிக்கும் தங்களின் நிலைகண்டு தான் வருந்துகின்றோம்.

பண்டையில் தங்கள் நாட்டில் எத்தனையோ அரச பரம்பரைகள் செங்கோலோச்சி, தமிழ் வளர்த்து, நூல் பெருக்கி வாழ்ந்து வந்தனர். கடல் கடந்துசென்று 'கடாரம் கொண்டான்' ஆளும்போதெல்லாம் கரடு முரடான

மொழியைக் காணவில்லை. தமிழகத்தை ஆண்ட சோழன், இறவாத புதுநூல்கள் இயற்றி, சங்கம் வைத்து மொழி வளர்த்த பாண்டியன்; சேரன் முதலானோர் தங்கள் நாட்டில் பிறந்து, வளர்ந்து, வாழ்ந்து, தங்களுக்காகவே இறுதி வரை உழைத்து, உயிர் நீத்த தியாகிகள்.

அவர்கள் சென்றபின் மொழியின் நிலையில் மாறுபடக் காரணம் என்ன? தென்றல் வீசிய பூங்காவில், வெப்பம் வீசக் காரணம் என்ன? இனிக்கும் அமிழ்தம் கசக்கக் காரணம் என்ன? இதைத் தாங்கள் அறியாததல்ல; அறிந்தும் வாளா விருப்பதுதான் ஆச்சரியத்தைத் தருகின்றது.

தாயகம்—தமிழகம்—தமிழ்மொழி தாழ்த்தப்பட்டிருக்கிறது. தமிழர்களுக்குள் ஒற்றுமையில்லை. கழகங்கள் பல ஏன்? தமிழுக்காகத் தொண்டு செய்யும்—தாயகத்திற்காகப் பாடுபடும்—நீதி, நேர்மையுள்ள ஒரே கழகம் மட்டும் இருந்தால் போதாதா?

தண்டமிழ்த் தாயே! வண்டமிழர்கள் வணங்கிக் கூறுகின்றோம். எங்கள் தமிழ் மொழியிடையே மாற்று மொழியைக் கலக்கச் செய்யாதீர்கள். மாற்றுமொழி—மாற்றெழுத்துக்கள் ஏன் எங்களுக்கு? ஆகவே, மாற்றெழுத்தை நீக்குவதைவிட. மாற்றுமொழியை நீக்கிவிட்டால், மாற்றெழுத்தை எழுதவேண்டிய அவசியம் இல்லையன்றோ?

கண்ணீர் விட்டுக் கதறி, காலடியில் வீழ்ந்து கெஞ்சுகின்றோம். எத்துணைத் துன்பம் நேரினும் இதயம் நெகிழா தமிழர்களாகிய நாங்கள், கேவலம்—ஒரு மாற்று மொழியால்—எங்கள் இதயத்திலே ஆயிரமாயிரம் ஈட்டிகொண்டு துளைப்பதுபோன்று வேதனையடைகின்றோம்.

வேலும், ஈட்டியும் விளையாட்டுப் பொருள் எங்களுக்கு. வீரத்துடன் நின்று வீரப்போர் புரிந்தால், எத்தனை காயங்கள் பட்டாலும் மகிழ்வோடு ஏற்றுக்கொள்வோம். ஏன்? தாயகத்தைக் காக்கும் எங்களுக்கு—எங்கள் தளர்விலா நெஞ்சத்தைக்கண்டு—தாங்கள் உளங்கனிந்து முத்தமிட்ட முத்திரைகளாக ஏற்றுக்கொள்வோம் அக்காயங்களை. வேத

ளைப்படமாட்டோம். மகிழ்ச்சி யடைவோம். அத்தகைய தா இஃது? எங்கள் உயிருக்கே—தமிழுக்கே—தாய் நாட்டிற்கே எழும் அவமான மன்றோ.

ஆகவேதான் மீண்டும் கூறுகின்றோம். எங்கள் இதயத்தின்கண் மொழியம்பால் ஏற்பட்ட புண்களைத் தாங்க விடாதீர்கள். தமிழகத்தில் வாழும் தமிழர்களாகிய நாங்கள், எங்கள் தாயான தங்களிடம் வேண்டி, விண்ணப்பித்துக் கொள்ளுகிறோம். தாயே! மீண்டும் கேட்டுக்கொள்ளுகிறோம்.

தங்கள் மைந்தர்களுக்கு ஊக்கமளியுங்கள். உச்சி மீது வானிடிந்து வீழ்ந்து நின்ற போதினும், அச்சமென்பதையே அறியா வைரமுடைய நெஞ்சை வாழ்த்தி அருளுங்கள். தொட்டால் சுருங்கியின் தன்மைத் தாமென, தூய தமிழிற்கு—தமிழகத்திற்கு மாசு ஏற்பட்டால், இன்னல் ஏற்பட்டால் உடனே அதை நீக்க அஞ்சாமையையும், ஆண்மையையும் அளியுங்கள்.

தாழ்ந்த மனப்பான்மை, தாழ்ந்த எண்ணங்கள் என்ற 'தாழ்ந்த' என்ற சொல்லுக்கு தமிழகம்—தமிழர்கள் இடங்கொடுத்து விட்டார்கள் என்ற வன்சொல்லை எங்களுக்கு ஏற்படாவண்ணம் அருளுங்கள். உலகிலேயே உயர்ந்த தமிழகத்தில் வாழும் தமிழர்களிடையே ஒற்றுமையை உண்டாக்குங்கள். வழியோடு வாழும் முறைமையை எடுத்தோதுங்கள். ஏழைமக்களைத் துன்புறுத்துவோருக்கு நல்ல இதயத்தை அளியுங்கள். தமிழை வளர்க்க தனயர்களுக்கு உற்சாக மூட்டுங்கள்.

தாய்நாடு வாழ்க! தாய்மொழி வளர்க!! என்ற வார்த்தைகள் தமிழகத்தில் அதிகமாக உலவுவதைக் கண்டும், அதற்காகப் பாடுபடுவதைக் கண்டும், தங்கள் உள்ளமும், எங்கள் உள்ளமும் பூரிப்படையச் செய்ய வேண்டுவதைத்தான் நாங்கள் விரும்புகின்றோம்; வேண்டுகின்றோம்; விண்ணப்பித்துக் கொள்ளுகின்றோம்.

வாழ்க எந்தமிழ்த்தாய்! வளர்க எந்தாய்மொழி!!

இளம்புலவன்

சோ. வேலாயுதம்

அன்று பௌர்ணமி, பூர்ண சந்திரன் உதயமானான். திருக்கடவூரில் வீற்றிருக்கும் அபிராமியை தியானிக்க மக்கள் ஏராளமாக கூடியிருந்தார்கள். அந்த பௌர்ணமியில் அம்பிகையை வழிபட்டு தன் குறையை கூறி நிவர்த்திக்க எண்ணி மக்கள் கூடியிருந்தனர். அந்த பௌர்ணமி அன்றைக்கே அம்பிகையை தியானிக்க நான்கு வகை படைகளுடன் வந்திருந்தான் மன்னன் கரிகாலன். அவனுடன் பல புலவர்கள் வந்திருந்தனர். அவர்களுடன் ஒரு இளம் புலவரும் வந்திருந்தார்.

அபிராமிகை சன்னதியில் அன்று நாட்டியக் கச்சேரி நடந்துகொண்டிருந்தது. மன்னர் கரிகாலனும் அவனது சகாக்களும் (படைகளும்) அந்நாட்டிய அரங்கமேடைக்கு எதிரில் சென்று அமர்ந்தனர். மன்னன் கரிகாலன் தன் சுய நினைவை இழந்து "பலே! ஊர்வசி,...பலே!" என்று கூறினான். மன்னர்பிரான் கூடவே அங்கு உள்ள மக்களும் தலையை ஆட்டியபடியே கைகளை தட்டினர். இளம் புலவர் மாத்திரம் தட்டவில்லை!—"போதும் நிறுத்தும்—புவி அரசே; இந்த பரத நாட்டியத்தில் என்ன நயத்தைக் கண்டீர்? மாபெரும் மக்களே! நீங்கள் என்ன நயத்தைக் கண்டீர்? என்றார் இளம் புலவர். இவர் இவ்வாறு கூறியதும்,— மன்னன் அவனைப் பார்த்து, "ஏன்? இந்த நாட்டியத்தில் என்ன நயமில்லை? இசையோடு கூடிய ஆடலும், ஆடலோடு கூடிய தாளமும், தாளத்தோடு கூடிய பக்க வாத்தியங்களும் மக்களை பரவசமாக்கி இன்பலோகத்தில், இந்திரசபையில் நர்த்தனமாடும் ஊர்வசியிடம் ஈர்த்துச் செல்கிறது இளம் புலவரே!" என்றான் மன்னன். "ஆமாம் இளம்புலவரே மன்னர் கூறிய கூற்று உண்மை!" என்றார் ஒரு பெரும் புல

வர். "கவி அரசரே மன்னர் கோன் கூறியது பிழை என்று யான் எண்ணவுமில்லை நவிலவுமில்லை! "ஊர்வசி பலே" என்று சொல்லப்பட்டதே அந்த இடத்திற்குச் சொன்னேன். அந்த இடத்தில் கதம்பமாக ஆகிவிட்டது. அப்படியிருக்கும் போது வீண் புகழ் கூறுவானேன் என்பதைத்தான் நான் தங்களுக்கு கூறுவது! அது தவறு இது தவறு என்று நான் எதையும் சொல்ல எனக்கு என்ன பைத்தியமா?" என்றான் இளம் புலவன்.

அங்கு கூடியிருந்த மக்கள் இளம் புலவனையே பார்த்துக்கொண்டிருந்தனர்; அவர் பேசும்போதெல்லாம் மக்கள் எல்லோரும் அவரையே பார்ப்பார்கள். "தலவிச்சை கல்லாமல் பாகம்படும்" என்பதுபோல் இளமையிலேயே சொல் வன்மையில் சிறப்புற்று விளங்கினர் இளம்புலவர்.

மன்னனுக்கு உரிய மகளிர்கள் அமர்ந்திருக்கும் இடத்திற்கு நடுவில் கயல் மீனை ஒத்த எழில் ஓவியம்போன்ற இளம் ஆரணங்கு ஆகிய பதுமா தேவி கடைக்கண்களால் இளம்புலவரை நோக்கியபடியே மற்ருெரு பக்கம் பார்த்துக் கொண்டிருந்தாள். இளம் புலவன் பேசும்போதெல்லாம் "மதியினைக் கண்ட குவளை போலவும், ஞாயிறு கண்ட முளரி போலவும்" பெரிதுவகை எய்துவாள் இந்த இளம் காரிகை. அப்படியே மெய்மறந்து உட்கார்ந்திருந்தாள். கூட்டம் கலைந்து சென்றது. "பதுமா ஏன் இன்னும் உட்கார்ந்திருக்கிருய்? எழுந்திரு" என்று கனிவுடன் சொன்னுள் வளர்ப்புத்தாய். ஏதோ எண்ண அலையில் வீற்றிருந்த அவள் கற்பனை தெய்வம் ஓடி ஒளிந்துகொண்டாள்!—இதோ வந்து விட்டேன் அம்மா என்று எழுந்து அவர்களுடன் நடந்து சென்றுள்.

* * * * *

மறுநாள் மணிமண்டபத்தில் தர்பார் கூட்டப்பட்டது. மன்னர் கரிகால் வளவன்—மந்திரிகள்—மற்றைய அமைச்சர்கள் தேவிகள் முதலிய சகாக்களுடன் ஆசனத்தில் அமர்ந்

திருந்தான் இன்னும் இவர்களுடன் புலவர்களும் வீற்றிருந்தனர். சிறிது நேரம் நிசப்தம் நிலவியது. பிறகு ஒவ்வொருவரும் மன்னரை புகழ ஆரம்பித்தனர் புலவர்கள் அவன் வன்மையையும் அவன் வீரச்செயலையும் பற்றி புகழ ஆரம்பித்தனர். அப்போது மணிமண்டபத்திற்கு இடையில் சிறிது நகைப்பு ஒலி கேட்டது! மன்னனின் தர்பாரில் நிசப்தமாகயிருந்தது. மன்னன் திரும்பி பார்த்தான், சுற்றும் முறறும் பார்த்தான் ஒன்றையும் காணவில்லை! அதேபோல மற்றவரும் திரும்பி திரும்பி பார்த்தனர் எந்த ஒலியும் கேட்கவில்லை; இளம்புலவரின் சூழ்ச்சி திறனுகத்தான் இருக்கவேண்டும்! வேறு யாரும் இந்த தர்பாரில் வீற்றிருக்கும்போது எவ்வித ஒலியும் செய்யமாட்டார்கள்! இளம்புலவராகத்தான் இருக்கவேண்டும்: என்று எண்ணி ஏவலனை சினம்தோன்ற பார்த்தான் மன்னன். மன்னரின் காலில் அடிபணிந்து வணங்கி ஐயனே, தங்கள் கட்டளை யாது?" என்ருன் வேலையாள். "இளம்புலவர் எங்கு இருந்தாலும் கைதியாக—இங்கு அழைத்துவருக" என்று கட்டளையிட்டான்.

"அண்டம் முழுவதும் எண்திசையும் தங்கள் புகழ் ஓங்க வேண்டும்! மாபெரும் புவி அரசே; தாங்கள் என்னை கைதியாக அழைத்து வரச்சொன்னதற்கு உரிய காரணம் யாதோ? இந்த பேதை கேட்கிறேன் செவிசாய்த்தருள வேண்டும்" என்ருன் இளம்புலவன். "உன்மேல் பெரும் குற்றமிருக்கிறது அதற்கு தகுந்த தண்டனையை கொடுப்பதற்காக அழைத்துவரச்சொன்னேன்" என்ருன் மன்னன். எனக்கா தண்டனை! நான் ஒரு பிழையும் செய்தறியேன், சபையிலே அமர்ந்திருக்கும் சான்ருேர்களே, வீரர்களே நீங்கள் ஆராய்ந்து கூறுங்கள் நான் செய்த பிழை யாது?" என்ருன் இறக்கத்தோடு இளம்புலவன். "சற்றுமுன் இந்த சபையிலே சிரிப்பொலி கேட்டதற்கு உரிய காரணம்? என்ருன் மன்னன். "அரசே, நான் அதை எவ்வாறு அறிவேன் எந்த பிழையும் செய்தறியேனே என்னை மன்னியுங்கள்" என்ருன் இறக்கத்தோடு இளம் புலவன். "இசையைப்

பற்றி உனக்குத் தெரியுமா?" என்றான் மன்னன். "நான் சிறுவன் எனக்கு அனுபவம் கிடையாது! எனக்கு தெரிந்ததை கூறுகிறேன்" என்றான் இளம்புலவன். "அதெல்லாம் எனக்கு தெரியாது சொல்லித்தான் ஆகவேண்டும்." என்றான் மன்னன். "சரி, அப்படியே தங்கள் கட்டளை" என்றான் இளம்புலவன். 'காலை நேரத்துக்கு உரிய பண்ணும், மாலை நேரத்துக்கு உரிய பண்ணும் யாது?' என்றான் மன்னன். அவையில் வீற்றிருந்த புலவர்களும் மற்றவரும் விழித்தனர். "இளம் புலவரே நீர் இதற்கு தக்கவிடை கூறினால் குற்றத்தினின்று நீங்கிவிடலாம்" என்றான் மன்னன். உடனே துர்க்காதேவியை எண்ணி,—"அம்பிகையே நான் என்ன பிழை செய்தேன்?—உன்னை நம்பி யான் வாழ்கின்றேன்!—என்னை நீ ரட்சிக்க மாட்டாயா? உன்னையே நம்பியிருக்கும் இந்த மானிடனுக்கு நல்ல அருளைத் தரமாட்டாயா? தேவி" . என்று மனமுருகி அம்பிகையை வணங்கினான் இளம்புலவன்.

இலேசாக இனிய தென்றலில் சலசலவென்று மெல்லிய நாதம் வருவதுபோல ஒரு இனிய இசை மெல்லென தவழ்ந்து வந்தது; அதுதான் காலைநேரத்திற்குரிய மருதப் பண். பிறகு அதேபோல மற்றொரு இசை காற்றை கிழித்துக்கொண்டு வந்தது. அதுதான் மாலை நேரத்துக்கு உரிய செவ்வழிப்பண். இது அம்பிகையின் அருளால் வந்தது. இளம்புலவன் மூடிய கண்ணை திறக்கவில்லை! அப்படியே இருந்தான். சபையிலே இருந்தவர்கள் வியப்படைந்தார்கள்; இளம்புலவர் கடவுள்பக்தி நிறைந்தவர் என்பதை அறிந்தனர். உடனே இளம்புலவன் மூடிய கண்ணை திறந்து அம்பிகைக்கு வணக்கம் புரிந்து மன்னன் கேட்ட கேள்விக்கு பதில் இறுத்தான்.

இதைக் கேட்டவுடன் மன்னன் பாராட்டினான். "மன்னரே என்னை பாராட்டி என்ன பயன்! எல்லாம் அவள் செயலே; அம்பிகையின் திருவிளையாடல்" என்றான் இளம்புலவன். அப்போது பதுமாதேவி," அப்பா...அப்பா அவரை விடுதலை செய்யுங்கள்! சற்றுமுன் தாங்கள் அவை

யில் வீற்றிருக்கும்போது சிரித்து பேரொலி உண்டாக்கியது நானே!" என்றாள். "ஏன் அம்மா சிரித்தாய்!" என்றான் மன்னன். "நான் மேல் மாடத்தில் எண்ணை முழுக்காடி தலையை ஆற்றிக்கொண்டு நின்றிருந்தேன், அப்போது இந்த இளம்புலவர்—"புகழுக்கு எல்லையில்லையா? "வெறும் வாய்ச் சொல்தானா?"—என்று காலை நேரத்துக்குரிய பண் மருதப் பண்ணையும் மாலை நேரத்துக்குரிய செவ்வழிப்பண்ணையும் கலந்து தெருவில் பாடிக்கொண்டே போனார். அதனால் எனக்கு மகிழ்ச்சி எல்லை மீறியது; அவர் காதில் சிரிப்பொலி எங்கு விழப்போகிறதோ என எண்ணி விரைந்து வரும்போது என்னை அறியாமலே சிரித்துவிட்டேன்" என்றாள் பதுமாதேவி. "இளம்புலவரே உங்களுடைய புத்திசாதுர்யத்தைப் போலவே என் மகளாகிய பதுமாதேவியும் பெரும் புலமை பெற்றிருக்கிறாள்; ஆகையால் தாங்கள் என் மகளை இன்றே கடிமணம் புரிந்துகொள்ளவேண்டும். என் மகளும் உங்களைத்தான் மணப்பேன் என்று உறுதி கூறியிருக்கிறாள். மேலும் இன்று உங்களை கைதியாக அழைத்து வந்தது இதற்காகத்தான். இளம்புலவரே என்பெண்ணை நீங்கள் தான் திருமணம் செய்துகொள்ளவேண்டும் இதற்கு தடை உளதோ?" என்றான் மன்னன். "கொற்றவனின் ஆணைக்கு மறுப்புவேறு உளதோ?" என்றார் இளம்புலவர்.

வெள்ளி முளைத்தது! மலர்ந்தது மல்லிகை!! வீசிற்று நறுமணம்!!! வண்டுகள் வந்து அமர்ந்தது!!!!

ஆசிரியர் குறிப்பு:—மருதப்பண்ணும், செவ்வழிபண்ணும், எழுத்தாளர் கூறுவதுபோல, அம்பிகையின் அருளால் வந்ததாக நாம் கருதவில்லை "எல்லாம் அவள் செயலே; உப்பரிகையிலிருந்த அம்மணியின் இசைச்செல்வமே அது!"

கவிஞன்

ஆர். சகநாதன்

உலக சரித்திரத்தின் ஒவ்வொரு சிறு நிகழ்ச்சியிலும், கவிஞர்களின் தொடர்பு ஆழ்ந்து கிடக்கின்றது. காட்டுமிராண்டியின் காலந்தொட்டு, இன்றுவரை பற்பல இலக்கியங்கள் ஆக்கி உலகோரை இன்புறச் செய்தவர் இந்தக் கவிஞர்களன்றோ? கண்டதும், ஒரு கணத்திலே மறைந்து போகக்கூடிய காட்சிகளை என்றும் உள்ளத்தில் சிறைப்பட்டு நிற்கும்படிப் பாடியவர் இந்தக் கவிஞர்களே. இன்றைய இளங்கவிஞர்களை ஊக்கும் பொறுப்பைத் தமிழ்த்தாய் கொண்டிருக்கிறாள்.

கவிஞர்களை எண்ணியவுடன், மென்மையான கவிதை உள்ளமும் நினைவில் எழும். இயற்கையின் சின்னஞ்சிறு தோற்றத்திலும், அசைவுகளிலும் ஒரு இளங்கவிஞன் கவிதை உணர்வடைகின்றான். தான் அடையும் உணர்வை, உலகுக்கு வெளியிடுவதே கவிஞனின் முக்கிய நோக்கம். ஆகவே, அந்தக் கணத்திலே, கவிதை அவன்முன் துள்ளிக்குதிக்கின்றது. அவன் பாடுகின்றான், கருமுகில்கள், கடலலைகள், நீலநிறமலைகள், கீதம் இசைக்கும் புள்ளினங்கள் யாவும் அவன் சொல்லிற்கு இலக்காகின்றன. இனிமை ததும்பும் புள்ளினங்களின் கீதங்களை தன்னுடைய பாடல்களில் ஒலிக்கச் செய்கின்றான்.

மேலை நாடுகளில் கவிஞர்களின் நிலை இருப்பதைப்போல் கீழை நாடுகளில் இல்லையெனலாம். நன்கு வளர்ச்சியுற்று, பிரபலமடைந்துவிட்ட கவிஞர்கள் ஆங்கே மக்களுக்கு இலக்கியங்களை, எழுதுவதுடன், இளம் கவிஞர்களை ஊக்குவதில் எந்த விதத்திலும் பின்னடைவதில்லை. நம் நாட்டில் எனில், இளம் கவிஞர்கள் தவறான சில கருத்துக்களை பெரும் இலக்கியங்களில் நுழைக்க எண்ணுவதால் பொதுமக்கள் ஆதரவில்லை. சூழ்நிலை, மனநிலை இவற்றை ஆராயாமல் செய்யும் எக்காரியமும் வீண்தான் என்பதை என் தாயகத்து இளைஞர்க்குத் தாழ்மையுடன் சொல்லிக்கொள்கிறேன்.

இயற்கையோடு ஒன்றிப்போன கவிஞர்கள், மக்களுக்குக் களிப்பூட்டும் கவிதைகளை இயற்றுவர். மேலைநாட்டின் கவிஞன் 'WORDS WORTH' என்பான் அத்தகையோருள் ஒருவன். தான் அனுபவித்த சின்னஞ்சிறு செயல்களையும் அவன் பாடுகின்றான். இயற்கையின் அற்புதத்தை மக்களுக்கு அவன் உணர்த்துகின்றான். நம் நாட்டில் தேசபக்தியைத் தூண்டும் கவிபாடிய பாரதியை அறிவோம்.

வீரம் துளிர்க்கப் பாடியவர் பாரதியார். அவர் இயற்றிய குயிற்பாட்டு என்னும் நூல் அவர் இயற்கை ரசிகர் என்பதை உணர்த்தி நிற்கின்றது.

வங்கம் தந்த கவிஞன் தாகூரை நம் இளைஞர்களுக்கு நினைவூட்டத்தான் வேண்டும். இன்றைக்கு உலகத்திலே கீதாஞ்சலியின் புகழ் உலவுகிறதின் காரணம் என்ன என்றறிய முற்படவேண்டும். தமிழிலே கீதாஞ்சலி மொழிபெயர்ப்பில் அதன் அருமையான கருத்துக்களைக் கற்கலாம். ஒரு கவிஞனுடைய கடமை உலகுக்கு நலவழி சொல்வது. ஒரு வளர்கின்ற இளங்கவிஞனின் கடமை, தன் முன்னோரின் இலக்கியத்தில் ஊறித்திளைத்து புது இலக்கியங்கள் சமைப்பது.

ஒரு கவிஞன் எந்தெந்தச் சமயங்களில் கவிதை உணர்ச்சி கொள்ளுகின்ருன் என்று திட்டமாய்க் கூறவியலாது. மதுவை அருகில் வைத்துக்கொண்டே இலக்கியங்கள் படைப்பானும் ஓர் பாரசீகக் கவிஞன். மதுவையும், மங்கையையும் பாடிய மற்ருெரு பாரசீக தேயத்துக் கவிஞனையும் உலகம் அறியும். உலகின் நிலையில்லாமையைச் சுட்டி, "மனதில் தோன்றுவதுபோல் களிப்பாயிரு" என்று அவன் கூறுகின்ருன். அவன் கருத்தையும் நாம் ஒப்புக்கொள்கிருேம், "ருபயாத்" நூலின் மூலமாக. ஒழுக்கத்தின் வழிநின்று இலக்கியம் வளர்க்கவேண்டும் என்போரையும் நம் நாட்டில் காண்கின்ருேம்.

அன்றியும் நமது நாட்டில் ஒரு உன்னத கொள்கை உலவுகின்றது. 'கலை கலாநாதனை தேவதேவனுக்குச் சமர்ப்பிக்கப்படவேண்டும்' என்பதே அது. சமீபத்தில், தமிழ் நாட்டின் சிறந்த எழுத்தாளரொருவர் இக்கருத்தையொட்டி ஒரு கவிதை புனைந்திருந்தார்.

கலையை வழிபடுபவன் கலைஞன். கவிதை ஒரு சிறந்த கலை. ஆகவே, கவிஞனும் கலையின் தூதனே. சின்னஞ்சிறு பொருள்களிலும் அழகையும், மென்மையையும் கண்டு பாடுபவன கவிஞனன்ருே? தெய்வப்படைப்பாகிய கலையை உண்டுபண்ணின கவிஞனுக்கும் தெய்வத்திற்கும் தொடர்புண்டென்பதில் தவறென்ன இருக்கின்றது?

உள்ளத்திற்கு மகிழ்ச்சிதரும் செயல்கள் மட்டுமே கவிதைக்குக் கருத்துகளல்ல. உலகின் பலபாகங்களில் கிடக்கும் துன்பங்கள், போராட்டங்கள், இவை யாவுமே நல்ல கவிதையாய் மலரலாம். மனிதக்குழுக்களின் குறைகள், தீர்க்கும் வழிகள் யாவுமே நமது கவிஞர்களின் எழுத்துக்கு இலக்குகளாம். வெறும் இன்பம் பயப்பது இலக்கியமல்ல; இன்பத்தோடு நல்வழியையும் அஃது உணர்த்த

வேண்டும்: ஆகவே, எழுதப்படும் ஒவவொரு கவிதையும், மறைமுகமாகவோ நேராகவோ ஒவ்வொரு உண்மையை மக்களுக்கு உணர்த்தத்தான் வேண்டும்.

பண்டைதொட்டு நம்நாட்டில் உலவிவந்த இலக்கியங்கள் எத்தனையோ பல. காலத்தால் குறைக்கப்பட்டவை மிகப்பல. இவற்றில் நாம் கற்கக்கூடியதோ மிகச்சிலவே. அன்றைய கவிஞர்களின் உள்ளொளி நிறைந்த பாடல்களை நாம் கற்கவேண்டும். இளைஞர்களுக்கு மறுபடியும் நினைவுறுத்துவதும் அதுவே. வெளிநாட்டு இலக்கியங்களை நாம் உணரல் வேண்டும்.

பெரிய ரசிகன் ஒரு சிறு கவிஞன் என்று ஒரு பேச்சுண்டு. கவிஞர்கள், சிறப்பாக இளங்கவிஞர்கள் தம்மை வளர்க்க, தமது இலக்கியங்களை மலர்ச்சியுறச் செய்ய மேலும் மேலும் இலக்கியங்களிலே ஒன்றவேண்டும்.

உலகமாதா வரவேற்கும் கரங்களுடன் நின்றுகொண்டிருக்கின்றாள்! அவள் மனதில் கொந்தளிக்கின்ற இன்பத்தையும், துன்பத்தையும் கவிதைகளாக்குவோமாக! விண்ணெணங்கும் நமது கவிதைகள் சிரஞ்சீவிகளாய் உலவட்டும்!

தமிழகம் இழந்ததாக கூறப்படும், குண்டலகேசி, வளையாபதி காவியங்களை கண்டு பிடித்து பதிப்பிக்கலாம் என்கிற உறுதி எங்களுக்கு இருக்கிறது. தமிழ் அன்பர்களின் ஆதரவு தான் தேவை.

ஆசிரியர் "கன்னித்தமிழ்" களஞ்சேரி.

அவளின் பாடல்!

ம. லெனின்

நெற்கதிர்கள் தலையசைக்கும் வயலின் ஊடே
நிற்குமந்தக் கன்னியைப்பார்! இருகரங்கள்
பக்குவமாய்க் கதிரறுக்கத் தனக்குத் தானே
பண்ணொன்றை இசைக்கின்றாள் நங்கை ஆ, ஆ!
பக்கத்துச் சோலையெலாம் அவளின் பாடல்
பாய்ந்தொலிக்கும்; தேன் பாயும் காதிலெல்லாம்!

எத்தனைஇன் னிசைபொழிந்தும் வானம்பாடி
இவள் முன்னர்த் தோற்றுவிடும்; கிளிகள் ஏங்கும்;
கத்திவிடும் நாணத்தாற் குயில்கள் இந்தக்
கன்னியிசை மடுத்திட்டால், காற்றிற் சேர்ந்து
தத்துமிசை கடலெல்லாம் எதிரொலிக்கும்,
தமிழிசைக்கும் கரும்புக்கும் புதுமையூட்டும்!

செந்தமிழைப் பாடுவளோ? இல்லை, சென்ற
காலத்தின் துயரினையோ? உள்ளம் நைந்து
சிந்துகின்ற உணர்வினையோ? அவள் உழைக்கும்
சிறுமையையோ? வறுமையையோ? வாழ்வுத் தேரின்
மந்த நிலை யோ, இழப்போ? எதனைப் பண்ணில்
வடிக்கின்றாள்? சோகம் அதில் விம்மி நிற்கும்!

யாதாய்த்தான் இருந்தென்ன! முடிவே யில்லா
இசையமுதைப் பெய்கின்றாள். இன்பம் நெஞ்சில்
மோதுறவே எனை யிழந்து சிலையாய் நின்றேன்
பின் சென்றேன் என் வழியே அவளின் பாடல்
காதினிலே ஒலிக்கவில்லை. எனினும் இன்னும்
'கணீ'ரென்று நெஞ்சில் அது ஒலித்து நிற்கும்

(கவிஞன் WORDS WORTH எழுதிய ஒரு பாடலைத் தழுவியது)

ஆசைக்கனவு

ச. கலியமூர்த்தி

தமிழ்க் கல்லூரியின் முதற்படி ஏறினன் வண்ணன். தாய்மொழிக்கு தொண்டு செய்து வாழவேண்டும் என்பதே அவனது இளமை எண்ணம். நாட்கள் நகர நன் முறையிலே பயின்றுவந்தான். நண்பர்களின் நல்லுணர் ஆட்டால் மனம் வளர, மதிவளர அவன் புகழ் வளர்ந்து வந்தது.

இவன் இக்கல்லூரிக்கு வரக் காரணமாய் இருந்தவர் இவனது தாய் மாமன் வடிவேலரே. வண்ணன் தந்தை எளியவர். முயன்று பத்தாம் வகுப்புவரை படிக்கச் செய்து விட்டார். அதற்கு மேல் அவரால் இயலவில்லை. ஆகவே மாமா வடிவேலரை நாடினன். வடிவேலர் ஓர் அரசாங்க அலுவலர், தக்க வருவாய் இருந்தது அவருக்கு. அவருக்கு ஒரே மகளாய் வளர்ந்து வந்தாள் வனிதை. வடிவேலர் வனிதையை படிக்க வைத்திருந்தார்.

கல்லூரியிலே வண்ணனுக்கு உடல் நிலை குறைய ஆரம்பித்தது. நீங்கும் வழியாய் இல்லை. கற்க வேண்டும் என்ற ஆசையால் வந்தோம். வந்தவிடத்து வந்துவிட்டதே நோய் என்று வருந்தினன்.

மருத்துவர் கூறினர்; "உடல் நிலை கவலைக்கிடமானதாய் உள்ளது. ஓய்வு தேவை. படிப்பை சில நாள் விட்டுவிட நேரிடும்" எனக் கூறிச் சென்றார்.

மாமனுக்கு அஞ்சல் அனுப்பினன், இரண்டு திங்கள் அங்கு வந்து தங்கி மோசமான உடல் நிலையைக் கவனித்துக்கொள்ளவேண்டுமென்று.

வடிவேலரது தந்தை முதுமையின் காரணமாக நோயின் விளையாட்டிலே நின்றுகொண்டிருந்தார். மருத்துவர் வந்தார். மருந்து கொடுத்தார். நோய் நீங்கியபாடில்லை. வடிவேலருக்குத் தந்தைமேல் அதிக பாசமிருந்ததுண்மையே; எனினும் அவரை நெருங்குவதில்லை. அழைத்தாலும் அருகில் செல்லார்.

இந்நிலையில்தான் வண்ணன் மாமன் வீட்டிற்கு வந்தான். அவன் அங்குவர கடிதம் அனுப்பியதுமன்றி வேறொரு காரணமுமிருந்தது. வண்ணன் தாய், தந்தையைக் காண அங்கு வந்திருந்தாள். வாடிய உடலும் வன்மையற்ற பேச்சும் வண்ணனிடம் குடிகொண்டன. நோயாளியுள்ள வீட்டிலே பிணியாளனாக வந்து சேர்ந்தான்.

தாய் கண்டாள். கண்ணீர் விட்டாள். படிப்பு போதும், வீட்டிற்குச் சென்றுவிடென்றாள். பெற்ற பாசம் அவள் கூறினாள்.

வடிவேலர் வந்தவனை என்ன என்று கூடக் கேட்டாரில்லை. அவரின் போக்கு வண்ணன் மனதுக்கு தளர்ச்சியைத் தந்தது. தந்தை மீது கவலையா? அண்டியவன் உடும்புபோல் இருக்கிறானே என்ற எண்ணத்தாலா? என எண்ணினான்.

மாமன் மனைவியிடம், எந்நிலை நோக்குங்கள். உடல் உடைந்து விட்டது. உயிர் சுருங்கிக்கொண்டிருக்கிறது. முன்னெச்சரிக்கையாய் அஞ்சல் அனுப்பி வந்தேன். கவனியாது இருக்கிறாரே என்றான். “கேட்டுப்பாரேன் நேரில்” என்றாள் அவள்.

உணவு வேளை நெருங்கியது. வடிவேலர் வந்தார். நெருங்கிச் சென்று நிலையைக் கூறினான் வண்ணன். “மருத்துவரிடம் மருந்துண்டு நீக்கிக்கொள்வதுதானே! இதற்குக் கூட நான் செய்ய வேண்டியது என்ன ?” என்றார். “மருத்து

வர் ஓய்வு தேவை என்ருர்" என்ருன். "படித்துக்கொண்டே மருந்துண்ணலாம். படிப்பை நிறுத்திஞல் படிப்பும் வீணுகும். நான் கொடுத்த பணமும் பாழ்" என இரைந்துவிட்டு வெளியேறிஞர் வடிவேலர்.

என்ன செய்வது என அறியாமல் கலங்கிஞன். அவர் நோக என்ன செய்தோம்! மனம் நோகப் பேசிச் செல்கிருரே என வருந்தி வடிவேலர் மனைவியிடம் "என்ன செய்வது இனி" என்ருன். "விருப்பம்போல் செய்" என தனது விருப்பமின்மையைக் காட்டிச் சென்ருள் அவள்.

கண்ணுடி முன் தன் உருவைக் காட்டி நின்ருன். அவன் பின்னிருந்து சிரிப்பொலி கேட்டது. மாமன் மகள் வனிதையே இவ்வாறு கேலி செய்கிருள் என அறிந்து அவ்வீட்டில் யாரும் தன்னை விரும்பவில்லை யென்பதை உணர்ந்தான்.

நோய் மனம் வேதனை கொண்டது. இனி நமக்கு கிங்கே வேலையென்ன? நன்றி மறப்பது நன்றன்றுதான். நன்றி செய்தவருக்கு நன்றி செய்ய முடியாத நிலையிலிருக்கிருேம். மொழிக்குத் தொண்டு படித்துத்தான் செய்ய வேண்டுமா? முடிந்தவரை பின் செய்வோம். என மன அலைகள் ஓலமிட அங்கு நிற்க மனமின்றி வெளியேறிஞன்.

தெருவில் ஒருவர் இவனைச் சுட்டிக்காட்டி மற்றவரிடம் கூறுவதைக் கேட்டன அவன் செவிகள். அவர் கூறிஞர்; "உறவினன் உதவியை நாடக்கூடாது. உயிர் நீங்கும் நிலையிலே கொடு கடனை என்பார்கள். இதோ! செல்கிருனே வண்ணன். இவன் மாமன் இவனைத் தமிழ் கல்லூரியிலே சேர்த்தார். நோயுடன் இங்கு வந்திருக்கிருன் போலிருக்கிறது. மணவறையில் கணவனை யிழந்தவள் ஒருவளுடன் சுற்றுகிருர். மனைவியைக் கூடக் கவனிப்பதில்லை. புதியவள் பேச்சிலே மயங்கிவிட்டார் வடிவேலர். எதில் போய் முடியுமோ!" என முடித்தார்.

காரணம் விளங்கிற்று கலங்கிய நெஞ்சனுக்கு. நடை விரைந்தது, கால் போன போக்கிலே சென்முன். வீட்டிற்கா? எங்கே செல்வது? என்பதை யறியான்.

இரண்டாண்டுகள் கழிந்தன. வண்ணனுக்கு ஒரு பத்திரிகை காரியாலயத்தில் வேலை கிடைத்தது. இன்னலிலே இடருற்ற அவன் நல்லது தீயதுணர்ந்து கவனத்துடனும், நல்ல முறையாயும் வேலை செய்து வந்தான். அதனுல் பதவி, ஊதியஉயர்வு முதலியன எளிதில் கிட்டின.

இருள் உள்ள இடத்தை ஒளி நாடும்; மதுவும் மணம் வீசும் மகரந்தமும் உள்ள இடம் நோக்கும் அறுகாலி; காந்தத்தால் கவரப்படும் கரும்பொன்; அன்புள்ள இடம் நோக்கும் மனம். உலக இயற்கையிது.

வண்ணனைப்பருவம் அணைத்தது. அவ்வணைப்பூடே மறு ஆண்டு எழிலரசியை அணைக்கும் பேறு பெற்முன். அவன் காதலில் எழுந்த கனி எழிலரசி. இன்பச்சோலையிலே இனிய கவிபாடி அழகோவியம் தீட்டி உயிரூட்டி உணர்ச்சியின் உச்சியிலே அவளுடன் காலத்தைக் கழித்தான் வண்ணன்.

காதல் ஊற்றிலே எழுந்த இவர்கள், இன்பங் காண்டற்கு கேட்கவா வேண்டும்? சிலருக்கு எளிதில் கிட்டுவதில்லை.

எழிலரசியின் விருப்பப்படி நல்ல இடங்களைக் காண கிளம்பினன் வண்ணன். அவன் தன் பெற்றேருக்குதான் இருக்குமிடம் அறிவிக்காதே இதுவரை பண உதவி செய்து வந்தான். இப்பொழுது தாய்தந்தையரைக் காணவேண்டும் எனும் அவா எழவே, சுற்றுப்பிரயாணத்தை முடித்துக் கொண்டு சொந்த ஊர் வந்தான் வண்ணன்.

மறைந்தவன் மங்கையுடன் வந்தான். பெற்ற தாய் பாசத்தால் பெருமையுடன் வரவேற்முள். மங்கையைக்

கண்டு மனங்கூசுவது அவள் முகத்தே தெரிந்தது. கண்டும் காணுதவனுய் இருந்துவிட்டான் அவன்.

இரவு நெருங்கியது. "அப்பா எங்கேயம்மா?" என்ருன். அவன் தாய் கண்ணீர் விட்டாள். அந்நீர்த் துளிகள் பேசின.

வடிவேலர் தன் மனைவி விருப்பமின்றி கள்ளக் காதலி யை—கணவனை மணவறையில் இழந்தவளை—வீட்டிற்கே கொண்டு வந்து வைத்துக்கொண்டார். சொந்த மனைவி சோறுண்டாளா என்ற கவலையே இல்லாமலும், பருவம் வந்த மகள் வனிதைக்கு மணம் செய்வது பற்றியும் எண்ண வில்லை. இவ்வாருன நிலையிலேதான் வண்ணன் தந்தை அங்கு சென்ருர்.

சென்றவர், வடிவேலர் நிலை நோக்கி நல்லன எடுத்துக் கூறிஞர். நல்லது பொல்லாததாய்த் தோன்றியது அவ ருக்கு. வண்ணனின் தந்தை முன்கோபக்காரர். எனவே மாற்ருளின் மயக்கப்பேச்சே துணையாகக் கொண்ட வடி வேலரைக் கடிந்தார். வாய்ப்பேச்சு கைகலப்பாக மாறியது.

மங்காத கோபங்கொண்ட வடிவேலர் மடியிலிருந்த கத்தியை எடுத்து மது மயக்கத்திலே வண்ணன் தந்தைமேல் பாய்ந்தார். அதனிடையே வடிவேலர் சொந்த மனைவி வந்து தடுக்க ஓங்கிய வீச்சு அவள் உயிரைக் கொண்டது. வடிவேலரின் அறிவுக் கண் திறக்கப்பட்டு குருதி வெறியிலே தன்னைத் தானே குத்திக்கொண்டார்.

சரியான உண்மை கிடைக்காமையால் வண்ணனின் தந்தை ஆயுள் தண்டனை யடைந்தார்.

கண்ணீர் விட்ட வண்ணன் "வடிவேலர் மகள் எங்கே?" என்ருன். "அவள் உன்னை காண மனங்கூசி மறைவாக இருக் கிருள். அவளை உனக்கே மணஞ் செய்விக்கலாம் என

நினைத்திருந்தோம். அவளும் திருந்திவிட்டாள். ஆனால் நடந்தது வேறாகிவிட்டது" என்றாள் அவன் தாய்.

மனம் விரும்பி மணந்த மனைவியிருக்க மற்றவளை மணக்க மனமில்லை என்பதைத் தன் பேச்சின் மூலம் சுட்டிக் காட்டிவிட்டான் வண்ணன்.

சிறையிலே வாடும் தந்தையையும், தன்னை நினைத்து ஏமாந்த வனிதையையும் எண்ணி மனம் வாடி படுக்கச் சென்றான். தூக்கமில்லை.

நள்ளிரவு; தாளிடாமல் இருந்தான் வண்ணன். நடுத்தர தூக்க நிலையிலே இருந்தான். காலீரம் அவன் தூக்கத்தை நீக்கியது. தன் கால்களை இரு கைகள் தொடுவதை யுணர்ந்து விளக்கேற்றினான்.

அங்கே!

அவன் காலடியில் வனிதை கண்ணீர் வடித்துக்கொண்டிருந்தாள். பரபரப்பிலே எழிலரசியும் எழுந்து விட்டாள். அங்கே வனிதையைக் கண்டவுடன் அவளுக்கு அவள் மேலும் தன் கணவன் மீதும் ஐயம் எழுந்தது.

"என்ன வனிதை? ஏன் கலங்குகிறாய்?" என்றான் வண்ணன்.

"அத்தான்!" என்று ஓலமிட்ட அவள் மேற்கொண்டு பேசமுடியாமையாலும், நிலை தடுமாற்றத்தாலும் வண்ணன் மீது சாய்ந்தாள்.

பதறிய வண்ணன் அவளை மடிமீது தாங்கினான். அவள் கண்கள் சுழன்றன! உதடுகள் படபடத்தன!! பேச நா மறுத்துவிட்டது. அவள் முகம் ஏதோ ஒன்றுக்கு ஏங்கும் ஆசை முகமாய்த் தோன்றியது.

"வனிதை! வனிதை!! வனிதை!!!" என்றான். அவள் கண்கள் ஒரு நிலையடைந்தன. வண்ணன் தாய் வந்தாள். கதறினாள். எழிலரசி ஐயம் நீங்கி ஆச்சரியத்துடனும் அனுதாபத்துடனும் கவனித்தாள்.

வனிதையின் இடையினின்றும் ஒரு கடிதம் எடுக்கப் பட்டது.

அதிலே!

"ஆசை அத்தான். அன்பு கலந்த வணக்கங்கள்."

நான் இறப்பது பற்றி ஐயம் எழலாம். ஆம். நான் இறக்கிறேன், கிட்டாத பொருள் ஒன்றின் காரணமாகவே. வருந்தாதீர்கள் அத்தான்.

"என்னை மன்னித்து விடுங்கள் இளமையிலே கூறிய சுடு சொற்களுக்கு. தாங்கள் பிரிந்த பின்பே தங்கள் குணம் விளங்கிற்று. அருகிலுள்ள பொருளைப்பற்றி யாரும் சரியாக அறியார்கள், அப்பொருள் வேறிடம் சென்றால் அதன் பெருமை பேசப்படும். காதலித்தேன் உங்களை. ஒரு தலைக் காமமாக முடியுமோ என ஐயுற்றேன். இருப்பினும் மனம் நிலைத்துவிட்டது.

எட்டாத பொருள் நீங்கள். இனி தங்களிடம் என் மனம் விரும்பும் ஆசையை எதிர்பார்க்கமுடியாது. அத்தான்! அக்காள் எழிலரசி எப்படி ஒப்புவாள் தன் பொருளில் பங்கிய? அப்படி ஈந்தாலும் அது முழு இன்பம் ஆகுமா?

இனி நானிருந்து அடையும் இன்பந்தான் என்ன? இறக்கிறேன் அத்தான்! மனம் தங்கள் முகத்தைக் கண்டு வாழ் என்றது. அதற்கு அறிவு இடங்கொடுக்கவில்லை. இரு மனைவியர் ஆசையால்தான் தந்தை முடிவு அப்படியாயிற்று! சென்றது செல்லட்டும்.

அத்தான் நான் தங்களிடம் வேண்டுவது ஒன்று. என்னவா? வெட்கமாய் இருக்கிறது அத்தான், வெட்கப் பட்டு நடப்பது இனி என்ன? நான் கேட்கும் இதற்கு அக்காள் இடந்தருவாள் என எண்ணுகிறேன்.

விரல்கள் தடுமாறுகின்றன அத்தான். "அத்தான் ஓரே முத்தம் கதுப்பிலிடுங்கள்!" ஏமாற்றாது இந்த என் வேண்டுகோளை செய்யுங்கள். வருகிறேன் அத்தான்!

இப்படிக்கு, தங்களை விரும்பி ஏமாந்த,
வனிதை.

படித்து முடிந்தபின் எழிலரசியை நோக்கினான் வண்ணன். அவள் கண்கள் நீரைச் சொரிந்துகொண்டிருந்தன.

புலி ஆட்டம்

"ஆரம்"

அன்று மாலை மேளச்சத்தம் கேட்டது. அம் முழக்கத்தைக்கேட்ட அவள் அப்படியே அசையாது நின்றாள். சென்றகால நிகழ்ச்சிகள் அவளை அவ்வாறு ஆக்கின. சிறகடித்துப் பறந்தது அவளது சிந்தனைப் பறவை.

ஐந்தாறு ஆண்டுகளுக்கு முன் அவள் பிறந்த ஊராகிய அந்தூரில் அம்மனுக்குத் திருவிழா. ஒரு வாரமாக இரவில் ஊர்வலம் நடைபெற்றது. தேர் விழாவும் இனிது முடிந்தது. மறுநாள் மஞ்சள் நீராடப் புறப்பட்டாள் அம்மன். முன்னும் பின்னும் பலர் மாற்றுருவத்துடன் ஆடிவந்தனர்.

அதோ இரண்டு பூதங்கள்! ஆம் பூதம்போன்ற இரு பெரிய உருவங்கள்! இருவர் கரிய, பெரிய, நெடிய உருவங்களைச் செய்து அவற்றினுள்ளே நுழைந்து ஆடி வருகின்றனர். அழகிய, பெரிய மயில் தன் தோகையை விரித்து ஆடிவருகிறது! ஒரு ஆள் மயில் போன்ற உருவந்தாங்கி ஆடி வருகிறான் — அதற்கு ஏற்பமேளமும் அடிக்கப் படுகிறது.

"சேற்றிலே பிறந்து வந்த
செல்லாண்டி யம்மனடா
ஆற்றிலே நீரோடும்
அற்புதமாய் நெல் விளையும்"

என்ன பாட்டு இங்கே? பலர் கூடி கரகம் ஆடிவருகின்றனரே! மூவர் உடுக்கையை அடித்துக்கொண்டே பாட்டும் பாடி வருகின்றனர். பாட்டுடன் கரக ஆட்டமும் நடைபெறுகிறது வாட்டமாக!. "பொய்க்கால் குதிரை" எனப்படும் புரவி நாட்டியம் நடைபெறுகிறது ஒரு புறம். இருவர் ஆடி வருகின்றனர் அரசனும் அரசியுமாக. அது என்ன பாட்டு?

"சனக ராசன் மகளல்லோ
சீதைப் பெண்(ணே)ணே கண்ணே
சீதைப் பெண்ணே கண்ணே
அவனல்லோ கொண்டு போனான்
ராவணச் சேனன் — ஆமாம்
ராவணச் சேனன்"

இதுதான் அங்கே நடந்தது:—அஞ்சலாளர் நல்லதம்பி ஒரு கோமாளி மனிதர்! ஊரில் அவருக்கு நல்ல மதிப்பு. பணக்காரர்களிடம் நல்ல செல்வாக்கும் உண்டு அவருக்கு. வருத்தமுற்றிருப்போரைத் தனது கேளிக்கையினால் வருத்தத்தையும் மறந்து சிரிக்கும்படி செய்து விடுவார். அவரும் அன்று ஒரு சிறுவனுக்கு வானரத்தலைவன் உருவத்தைப் போட்டு ஆட்டிவைக்கிறார். அந்த இராம தூதனின் அங்க அசைவு நெளிவுகளினாலும், குறும்புத்தனத்தினாலும், தனது தெம்மாங்குப் பாட்டினாலும் கூடியுள்ள மக்களை மகிழ்ச்சிக் கடலில் மிதக்கும் வண்ணம் செய்கிறார் நல்லதம்பி. அவரது கேளிக்கைக்கும் தெம்மாங்கிற்கும் அடையாளமாயிருப்பது அவர் பாடும் "பிள்ளைக் கிளியம்மா" பாட்டு ஒன்றே. இதோ அதன் ஒரு துளி:—

"தாழம்பூக் கொண்டையிலே எந்தன் கண்ணாட்டி
மகிழம்பூ வீசுதடி பிள்ளைக் கிளியம்மா
செக்கச் சிவந்திருக்கும் உந்தன் உதடு
செம்பருத்திப் பூவைப்போல பிள்ளைக்கிளியம்மா"

இன்னும் ஒரு பாட்டு கேட்கிறதே! அதையுந்தான் கேட்போமே:—

"காயமே இது பொய்யடா சீவன்
காற்றடைத்த பையடா
மாயனார் குயவன் செய்த
மண்ணு பாண்டம் ஓடடா"

அதோ அடியார்களின் கூட்டம் ஒன்று தெரிகிறதே! அது தான் காரணம் போலும்! காவியுடை உடுத்தியும், மணிகளும் மாலைகளும் அணிந்தும் திருவோட்டைக் கையில் ஏந்திய வண்ணம் மனித யாக்கையின் அமைப்பையும் அதன் அழிவையும் வலியுறுத்தும் உடற்கூற்றுப் பாடல்களைப் பாடி வருகின்றனர் சிலர்.

இவை எல்லாவற்றிற்கும் தலையாய நிகழ்ச்சி இதோ வருவது! அதுதான் புலி ஆட்டக் காட்சி. பச்சை, சிவப்பு, மஞ்சள், நீலம்... இன்னும் பலவித நிறங்களையும் குழைத்து உடலெங்கும் புள்ளிகள் குத்திக் கொண்டும், வரி வரியாகக் கோடுகள் இழுத்துக் கொண்டும் முகத்தில் பெரிய மீசையை முறுக்கிக் கொண்டும், வாயில் ஒரு எலுமிச்சம் பழத்தைக் கவ்விக்கொண்டும், பயங்கரப் புலியின் தோற்றமளிக்கிறான் சின்னச்சாமி. ஒரு ஓட்டை உடைசலான பழைய துப்பாக்கியை இரவல் வாங்கி அதைக் கையிலே பிடித்துக் குறிப்பார்த்து சுடும் வேட்டைக்காரனாக வருகிறான் வேலப்பன். இருவருக்குமிடையே ஒரு நீண்ட மூங்கிற்கழி அதன் இரு நுனியையும் பிடித்துக்கொண்டு நிற்கின்றனர் இருவர். கலைக் குடுமியவிழ்ந்தது கூடத்தெரியாமல் மேளம் வெளுத்து வாங்குகிறான் மேளக்காரன். சீற்றத்துடன் பாய்கிறது சிறுத்தை; குறிபார்க்கிறான் வேலு; வாயிலிருந்த எலுமிச்சம் பழத்தைக் கடித்துத் தின்கிறான் சின்னசாமி எலுமிச்சம்பழம் முதல் வேட்டையாகிறது புலிக்கு!

விறு விறுப்புடன் வேகமாகப் பாய்ந்து ஆடுகிறது புலி; புலியின் வெறி கணத்துக்குக் கணம் அதிகமாகிறது ஆட்டத்தைக் கண்டு மகிழ்ச்சியடைந்த மருதமுத்து ஒரு சேவற் கோழியை வீசி யெறிகிறான் புலியின் முன்னே. கோழியின் கழுத்தைக் கவ்விப் பிடித்துக் கடித்துக் குருதியை உறிஞ்சுகிறான் சின்னசாமி. புலிக்கு இரண்டாவது இரையாகிறது கோழி!

இரத்தத்துடன், (பின்பு) மதுவையும் உண்ட அவன் வெறி அதிகமாகிறது, வேட்டைக்காரன் வேலுவின் மீது ஆவென வாயைத் திறந்து உறுமிக்கொண்டு பாய்கிறது புலி. ஒரு கணம் எல்லோரும் செய்வதறியாது நின்று விட்டனர். இனி யாது நேருமோ எனத்துடிக்கின்றன நூற்றுக் கணக்கான உள்ளங்கள்.

அப்போதுதான் இது நிகழ்ந்தது. பக்கத்து ஊரிலிருந்து திருவிழா பார்க்க வந்திருந்த வீரப்பன் மேலே போட்டிருந்த சிற்றுடையை முன்னங்கையில் சுற்றிக் கொண்டு, புலியின் வாயை நோக்கிச் செலுத்தினான் தன்

கையை; பாய்ந்து கடிக்கிறது புலி! உடனே நான்கைந்துபேர் புலி உருவம் பூண்டிருந்த சின்னச்சாமியைப் பிடித்துக் கொள்கின்றனர். திமிறுகிறது புலி ஆனால் "முரண்டனுக்கு இரண்டாள்" என்பது போல, பலருடைய பிடியினின்றும் மீளுவதற்கு ஒருவனுன சின்னச்சாமியால் முடியவில்லை புலியின் மூன்றாவது பலி பலிக்கவில்லை புலியாட்டம் கலைகிறது; நல்லவேளை ஒரு தீமையும் நேரவில்லையே என்று ஆறுதலடைந்தனர் கூடியிருந்த மக்கள். எல்லோரையும் விட அதிக அளவு துக்கமும், மகிழ்ச்சியும் அடைந்த ஓர் உள்ளமும் அங்கே உண்டு. அது யாரென்கிறீர்கள்? வேறு யாருமில்லை; வேலப்பனின் உடன் பிறந்தவளான செல்லாயி தான் அதிலும் தான் காதலித்த காளையான வீரப்பன் தன் தமையனுயிரைக் காப்பாற்றியதைத் தன் கண்களாலேயே கண்டதும் அவள் உள்ளம் மகிழ்ச்சியால் பொங்கிப் பூரித்தது; வீரப்பனுக்கும் நன்றி செலுத்தியது; தன்னை அவனிடமே சேர்ப்பிக்குமாறு அக்கணமே அம்மனை வேண்டினுள் அவள்.

சின்னச்சாமி நல்ல உயரமான உடலும் உரம் பெற்ற நெஞ்சையும் கொண்டவன் ஆனுல் வஞ்சகன், மூடன், முரடன்; வேலுவும் அவனும் இணைபிரியாத நண்பர்கள் ஆதலால்தான் அவர்களிருவரும் சேர்ந்து புலியாட்டம் ஆடலாயினர். எனவே உயிர்த் தோழனுகிய சின்னுவுக்குத் தன் தங்கையை மண முடிக்க எண்ணினுன் வேலு; அவளோ அழகும் ஆண்மையும் உள்ள வீரப்பனைக் காதலித்தாள். இதையறிந்தான் சின்னு; அதனுல் வேலுவின் மீது சீற்றங் கொண்டான். எனவே குருதியுண்ட வெறியுடன், மது வெறியும், உள்ளத்தீயும் ஒன்று சேர அன்று அவ்வாறு செய்யலானுன். பின்பு எல்லாம் அறிந்த வேலு வீரப்பனுக்கு செல்லாயியை மணம் முடித்து வைத்தான்.

அம்மன் அடுத்த வீட்டுக்கருகில் வந்து விட்டாள்; பழம் தேங்காய் படைக்கவேண்டாமா? வேடிக்கை பார்த்து வந்த வீரப்பன் வீட்டினுள் நுழைந்தான். "என்ன செல்வி! புலி ஆட்டத்தின் நினைவில் உலகையே மறந்து விட்டாயா?" என்று கூறி அவளது சிந்தனைப் பறவையின் சிறகைப் பிடித்து நிறுத்தினுன் வீரப்பன்.

"செந்தமிழ்ச் செல்வி" யின் மதிப்புரை

இதன்கண் பல சிறந்த அறிஞர் கட்டுரைகளும் கற்பனைக் கதைகளும் காணப்படுகின்றன. எல்லாம் தனித் தமிழ் வண்ணமே. வட மொழியாளர் சூழ்ச்சியால் நேர்ந்த கேடுகள் ஆங்காங்கு நிகழ்த்தப் பட்டுள்ளன.

அறமுறைகள், ஒழுக்கங்கள், வாழ்க்கைப் பண்புகள், புலவர்கள் போற்றும் புலவர்கள், ஆற்றும் ஆண்மையர், வினைப் பயன்கள் முதலிய பலவும் விளங்க உரைக்கப்பட்டுள்ளன. தமிழகமும் தமிழும் சிறந்தோங்க இந்நூல் சிறந்த துணையாகும்.

இதனை எல்லாரும் வாங்கியும் வாங்குவித்தும் அருந் தமிழ் மொழியினைப் பண்டையினும் சிறக்க ஓங்குவிப்பார்களாக. இந்நெறியில் உழைத்து வெற்றி கண்டுள்ள இந் நூலாசிரியர்க்குத் தமிழுலகம் பெரிதும் கடமைப்பட்டுள்ளது.

June **55.**

The Hindu

Kannithamizh:- This is modelled on the Penguin 'New Writing' volumes. It contains essays and poems written by a number of authors on varied subjects. The editor explains that the aim of the publication is to encourage young writers to write stories, essays and poems. The one restriction which the Editor has on the writings is the elimination of Sanskrit alphabets which have crept into Tamil usage. He seems to have no objection to using Tamilised Sanskrit words. There are as many as 24 articles in prose, each followed by a small poem on different subjects. Of these 10 are short stories based on incidents in daily life. A letter on 'Pazhamai Vendum' and essays on 'Varunkala India', 'Tamil Chelvan' 'Kannithamizh' and others make interesting reading.

The publication is good and in a way unique. Further volumes in the series will be awaited with interest.

27—6—54

Edited and Published by L. SESHADRI (மறைமலையடிமை) 2/3, Kalancheri (Tanjore) and printed by A. S. M. Ismath Batcha, at his ANDAVAN PRESS, 146, THUKKAMPALAYA STREET, KUMBAKONAM.